புதினப் பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பெற்றது. உ விரோதி௵ (1889) ஆவணி௴ உ௸ ஆரம்பமானது.

பத்திராக்கிரயம்.
வருஷம் ஒன்றுக்கு:
யாழ்ப்பாணப் பட்டினம் ரூ 5·00
இங்கிலீசும் தமிழும் 9·00
இலங்கை இந்தியா ரூ 8·00
இங்கிலீசும் தமிழும் 12·00
சோவியாப்பகுதி ரூ 9·00
இங்கிலீசும் தமிழும் 13·00
முற்பண மனுப்பினா லன்றிக் கவனிக்கப்படா.

# இந்துசாதனம்.

சோமவாரத்திலும், குருவாரத்திலும் பிரசுரமாகும்.

"எனைத்தானு நல்லவை கேட்க அனைத்தானும், ஆன்ற பெருமை தரும்".

விளம்பரவிகிதம்.
முதன் முறைக்கு:
" ஒருகலம் ரூபா 10·00
" அரைக்கலம் " 5·50
" கால்கலம் " 4·00
அடுத்த முறைகட்கு மேற்படி விகிதங்களிற் பாதி.
☞ விளம்பரங்கள் முற்பண மனுப்பினா லன்றிக் கவனிக்கப்படா.

"சீர்பூத்த கருவிகர ணங்களொரு நேர்ச்சி வெம்பூத்த நிகமாக மங்கலைகளங்கப், பார்பூத்த புறச்சமய விருள்சனிக்கப் பரம்பூத்த சைவநெறிபாரோர் தாங்கப்,
பேர்பூத்த வொளங்கதந் தினிதா துவக்கப் பிறைபூத்த சடைமவுலிப் பிரானார் தந்த, வார்பூத்த வறிவிச்சை தொழிலென் றேழ மதம்பூத்த விநாயகன்றாள் வணங்கி வாழ்வாம்"

"வாழ்க வந்தணர் வானவ ரானினம், வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக, ஆழ்க தீயதெல்லாமர னாமமே, சூழ்க வையக முந்துயர் தீர்கவே."

புத்தகம்—சரு } யாழ்ப்பாணம்:— ஸ்ரீமுக௵ தை௴ உ௩உ; (1934 பிப்ரவரி 5) திங்கட்கிழமை. { இலக்கம்—அக

## ஹரதத்தர் மகிமை.

கஞ்சனூரிலே மதுருசுனுசாரி யென்னும் பாஞ்சராத்திரியாருக்குநர் சுபுத்திரர் அவதரித்து சிவநேசத்தோடுவளர்ந்துவரும் அதிசயத்தைப் பாஞ்சராத்திரியா ருணர்ந்து உளம் வருந்தி ஒருவாறு தெளிந்து அப்பிள்ளைக்குச் சுதரிசனுச்சாரி யென்னும் பெயர் புனைந்து பாஞ்சராத்திர கர்மங்களைச் செய்யத்தொடங்குகையில், அவர் தந்தையை நோக்கி, 'உம்மால் செய்விக்கப்படும் அவைதிக கருமங்கள் எமக்குடன்பாடில்லை, சிவபிரானருளிய வேதசிவாகமங்களே புக்கிய பிரமாணங்கள், அவற்றால் துணிந்து கூறப்படு முண்மைப் பொருளாயுள்ளவர் சிவபெருமானே, அவரையடையவரும் சன்மார்க்கம் சைவமே, அச்சமயத்தாற் பெறப்படும் சிவதீக்ஷை முதலியனவே முத்திசாதனம, இவ்வுண்மை முத்திபடைபவர்கள் சிவனடியார்களே, இதுவே என்னுடைய துணிபு. சர்வமங்களகுணகரனும் விளங்கும் ஹரன் என்னும் திவ்விய நாமத்தினையுடைய சிவபெருமானுக்கு நான் தத்தமாகிவிட்டேன். ஆகையால், என்னை இனி ஹரதத்தன் என்றுணரக்கடவாய்.' என்றுரைத்தருளி, விபூதியுருத்திராக்கமாதி சைவமுத்திரைகளைத் தாங்கிக்கொண்டு சிவநேசர் திருவடிகளை ஆசிரயித்துச் சைவமார்க்கப் பிரசாரஞ்செய்துகொண்டிருந்தனர்.

பாஞ்சராத்திரி அருயை யதிகரித்தவராய் ஹரதத்தரையடைந்து சிலவேத வாக்கியங்களைக்கூறி நாராயணனே பரம்பொருள் என்றுபதேசிக்கப்புகுந்தகாலத்து, அவ்வாக்கியங்களையெல்லாம் ஒவ்வொன்றாகப் பூர்வபட்சம் செய்து சித்தாந்த வாக்கியங்களாலுண்மையைத் தெளிவுபடுத்தி, சர்வஜனப் பிரசித்தியாய் அரசன் முதலியவர்களறிய அக்கினி சம்ஸ்காரப்பட்ட இருப்புப்படிகளி லேறி

"உயர்கா யத்திரிக் குரிப்பொரு ளாகலில்
தசரதன் மதலை தாபித் தேத்தலிற்
கண்ணன் கயிலையி னண்ணிசின் றிரப்பப்
புகழ்ச்சியி னமைந்த மகப்பே றுதவலில்
தனதா விழியுட னொராயிரங் கமலப்
புதமலர் கொண்டரி பூசனை யாற்றலின்
ஆங்கவற் கிரங்கி யாழியீ தருதலின்
ஐங்கணைக் கிழவனை யழல்விழி தாக்கலின்
அமைப்பருங் கடுவிட மமுதுசெய் திடலில்
தென்றிசைத் தலைவனைச் செகுத்துயிர் பருக
அவுணர் முப்புர மழியவில் வாங்கலின் [லின்
தக்கன் வேள்வி தகர்த்தருள் செய்தலின்
தனஞ்சயன் றனக்குத் தன்படை வழங்கலின்
மானிட மடங்கலை வலிசபக் கோறலின்
மாயோன் மகவேழ வாகிய காலைத்
தடமுலை திளைத்துச் சாத்தனைத் தருதலின்
ஆழ்கடல் வடவரைப்பி னன்றே ரனேகர்
அன்புமீ தார வருச்சனை யாற்றலின்
நான்கிரு செல்வமு மாங்கவர்க் கருளலின்
ஐயிரு பிறப்பினு மரிபதச் சித்தலின்
இருவரு மன்னமு மேனமு மாகி
யடிமுடி தேட வழற்பிழம் பாகலிற்
பிறப்பிறப் பாதி யுயிர்க்குண மின்மையிற்
கங்கைசூழ் கிடந்த காசிமால் வரைப்பிற்
பொய்புகல் வியாதன் கைதம் பித்தலின்
முப்புர மிறுப்புழி முகுந்தப் புத்தேள்
மால்விடை யாகி ஞாலமொடு தாங்கலின்
அபன்சிர மாலை யளவில வணிதலின்
ஞானமும் வீடும் பேணினர்க் குதவலிற்
பசுபதிப் பெயரிய தனிமுதற் கடவுள்
உம்பர்க ளெவர்க்கு முயர்ந்தோன்
என்பது தேவிக வியல்புணர்ந் தோரே."

என்னுங்கருத்துக்களடங்கிய சுலோகங்களை கூறி ஒவ்வொருபடியிலிருந்து கொண்டு ஒவ்வொருவிஷயமாக வாதித்து ஒருவருக்கும் தம்மெதிர்நின்று வாய்திறப்பதற் கிடமில்லாமல் எல்லாரையும்வென்று அனற்பரிசத்தால் செக்கிறந்தோய்ந்து விளங்கும் அப்படிகளினுச்சியின்மே லிருந்துகொண்டு ஹரதத்த சஹஸ்ரம் என்னுங் கிரந்தமொன்றியற்றி ஆயிரங் சுலோகங்களால் தமது சித்தாந்தத்தை காட்டித்தக்கையுட்பட எல்லாரையுந்திருத்தி யாவர்க்கும் சிவதீக்ஷை செய்து சன்மார்க்கத்திலுய்வித்தபிரபாவம் ஸ்ரீமத் அப்பைய தீக்ஷித சுவாமிகளருளிய ஹரதத்தமான்மியமென்னுங் கிரந்தத்தாலினிது பெறப்படும். இவரைத் திருநந்திதேவர் அவதாரமென்று சிவரஹஸ்யமாதி கிரந்தங்கள் கூறும். இவராற்செய்யப்பட்ட நூல்கள் சதுர்வேத சாரம், தத்வநிரூபணம், ஹரிஹரதாரதம்யம், ஸ்ரீகண்டபாஷ்ய சமர்த்தனம், உஜ்வலம் என்கிற ஆபஸ்தம்ப சூத்திரபாஷ்யம், ஞானரத்னாகரம், சிவாதிக்ய சிகாமணி, பக்தாதிக்யசிகாமணி, சைவாகமபூஷணம், விபூதிபஞ்சகம், ருத்திராக்ஷபஞ்சகம் முதலியனவாம். —சிவநேசன்.

## பலயாளத்தவனின் சோரக் காதல்.

— o —

### விசாலாட்சியுடன் ஓடிய மர்மம்.

அராலிப்பிள்ளையார் கோயிலுக்கணித்தாகப் பிரபல வியாபாரியாயுள்ள ஸ்ரீ இராமலிங்கம் (வயது 50) என்பவரின் மனைவியான 30 வயதுடைய விசாலாட்சியென்னும் பெண், ஐயாப்பிள்ளை யென்னும் 22 வயதுடைய மலையாளத்து வாலிபன் ஒருவனுடன் சோரகட்புப்பூண்டு கணவனுக்குத்தெரியாது ஓடிப் பின் அகப்பட்ட சம்பவம் எமக்கு எட்டியிருக்கின்றது. விபரம் வருமாறு:

ஐயாப்பிள்ளை யென்னும் குறித்த மலையாளி ஸ்ரீ இராமலிங்கத்தின் கடையிற் சிலகாலமாக வேலைக்கு இருந்தவன். இற்றைக்கு 3 மாத காலத்திற்குமுன், எக்காரணத்தினாலோ அவன் கடையினின்றும் நீக்கப்பட்டான்

சென்ற வெள்ளிக்கிழமை யிரவு, விசாலாட்சியைக் காணவில்லை. எனவே, அவ்வூரார் யாவரும் பொலீசாருக்கு அறிவித்து எங்குந்தேடித்திரிந்தனர் சென்ற சனிக்கிழமை யிரவு 7 மணிவரையில் ஸ்ரீ இராமலிங்கம், பொலிஸ் தலைமைக்காரர் முதலியோருடன், தமது மனைவியைத் தேடிக் கொடிகாமம் புகைரதஸ்தானத்திற்குச் சென்றனர். கொழும்பிற்குச் செல்லும் புகைரதம் ஸ்தானத்திற்கு வந்ததும் ஐயாப்பிள்ளையும விசாலாட்சியும் ஆங்கு வரக்காணப்பட்டனர். உடனே அவர்கள் சிறையாக்கப்பட்டனர் விசாலாட்சி தான் மனப்பூர்வமாகவே குறித்த மலையாளியுடன் சென்றதாகக் கூறினளென்று தெரிகிறது. இதன்பேரில் மலையாளத்தான் விடுதலை செய்யப்பட்டான். பெண் மீண்டும் கணவன் வீட்டில் இருக்கிறாளென்று தெரிகிறது.

### திருத்திக்கொள்க.

சென்றதிங்கட்கிழமை (29-1-34) வெளிவந்த இந்துசாதனத்தில் "நீதிஸ்தலத்திற்கருகே அடித்தான்" என்ற தலையங்கத்துப் புதினத்தில் "கே செல்லையா என்பவர் வேலன் கந்தையாவை அடித்தார்" என்பதை வேலு கந்தையாவை அடித்தாரென்று திருத்திக்கொள்க.

### விவாகம்.

வண்ணார்பண்ணை சீர்வாசியடிவாசரும் வியாபாரியாயுள்ளவருமான ஸ்ரீ S.பொன்னம்பலம் அவர்களின் கனிஷ்ட புத்திரனும், குருநாகல்வனபரிபாலனப்பகுதியில் லிகிதராகக் கடமை பார்ப்பவருமான ஸ்ரீ. அமரசிங்கம் அவர்களுக்கும், அளவெட்டி வடக்கு ஸ்ரீ மூ கார்த்திகேசு அவர்களின் புத்திரி ஸ்ரீமதி செல்லம்மாளுக்கும் சென்ற 26-1-34 இரவு மணமகளாலயத்திற்றானே விவாகசோபனம் இனிது நிறைவேறியது

தம்பதிகள் அட்ட ஐஸ்வரியமும்பெற்று இனிது வாழும்வண்ணம் வேண்டுவார் வேண்டுவதே ஈயும் சண்முகப்பெருமான் திருவருளைப் பிரார்த்திக்கின்றோம்.

### சமாசனக் குழப்பம்.

ஒரு நோப் பள்ளிக் கூடமாய் நடக்கிறது.

மல்லாகத்திலுள்ள ஆங்கில வித்தியாசாலையில் சமாசனம் உதவப்பட்டமையினால் நேர்ந்த அசௌகரியங்களைச் சென்ற பிரசுரத்தில் வெளியிட்டிருந்தோம்; அங்கு படிக்கும் பலபிள்ளைகள் உணவுண்ட சோற்றுக்கடையில், சமாசனம் காரணமாக கடைக்காரர் தங்கடையில் வைத்துச் சாப்பாடு கொடுக்க மறுத்தமையினால், இப்பொழுது பள்ளிக்கூடம் ஒரு நேரமாக குறைந்த பிள்ளைகளுடன் நடைபெறுகின்றதாம்.

## கிறீஸ்தவ உலகம் சிந்திக்குமா?

— (*) —

### மதத்தலைவரின் யதார்த்த மொழிகள்.

### "போலித் தேசீயத்தை அறவே யொழிக்குக"

இற்றலி தேசத்திற் பிரசுரமாகும் "இன்ரான்ஸிஜன்ற்" என்னும்பத்திரிகை நிருபர் ஒருவர் சென்ற வியாழக்கிழமை, ரோமாபுரியில் வசிக்கும், கத்தோலிக்க மதத்தலைவரானபாப்பரசர் அவர்களைச் சந்தித்து உலகத்தின் தற்போதைய அரசியல் நிலைமை சம்பந்தமாகச் சம்பாஷித்தார். பாப்பரசர் கூறியதன் சாரமாவது -

"ஐரோப்பாக்கண்டம் இப்போதுவெடிமருந்துச் சாலையை நிகர்க்கிறது. நெருப்புப்பற்றி எப்போது யாவற்றையும் தகித்து விடுமோ என்று எவரும் அஞ்ச வேண்டியவரா யிருக்கின்றனர். ஐரோப்பா மாத்திரமல்ல, அதனைத் தொட்டு உலகமுழுவதும் அழியுமோ என்று அஞ்ச வேண்டியிருக்கிறது. தற்போதைய நிலைமையின் பயனாக கிறீஸ்தவ சீர்திருத்தமே அல்லோல கல்லோலப்பட்டு அழிந்துவிடும் போலிருக்கிறது.

"உலகத்திலேயுள்ள வல்லரசுகள் யாவும் யுத்த வெறிகொண்டிருக்கின்றன. பெண்களுக்கும் இராணுவப் பயிற்சி அளிக்கவேண்டும் என்ற முயற்சி இப்போது நடைபெறத் தொடங்கிவிட்டது. இதைப்போற் கேவலமானது பிறிதொன்றில்லை.

"உலகத்தில் ஒவ்வொரு தேசத்தினரும் தேசாபிமானம் தேசாபிமானம் என்று வாய்ப்பறை சாற்றித் தம் 'சொந்த'த் தேசம் மேனிலையடைவதற்காகத் தாமிலும் பார்க்க வலிமை குறைந்த ஜாதியாரை அடக்கியாண்டு வருகிறார்கள். இது கிறீஸ்துவ தர்மமன்று இப்படிப்பட்ட தேசீயத்தை, இப்படி அனர்த்தம் விளைக்கும் போலித் தேசீயத்தை மக்கள் தம் மனத்தினின்றும் அகற்றுவாராக.

"எமக்கு வேண்டியது சமாதானம்; சமாதானம் என்றால் வாய்ப்பேச்சளவில் உள்ள போலிச் சமாதானமல்ல. உலகில் உள்ள ஒவ்வொருவரும் மனப்பூர்வமாக மன்னுயிரைத் தன்னுயிர்போற் பேணி வினையும் சமாதானமே நாம் அவாவுதல்".

கிறீஸ்துவ உலகம், இப்பெரியாரின் யதார்த்த மொழிகளைச் செவிமடுக்குமா?

## நாயினும் கேடரா இவர்?

ஜப்பானின் தலைநகராகும் டொக்கியோ நகரில் ஹெய்ச்சிகோ என்னும் பெயருடைய ஓர் நாய் உளது. அதனைச் சமாதான வீரன் என்று கூறலாம். தன்னினத்தில் சமாதானமேற்படுத்த அது ஓயாமல் முயல்கின்றது எப்போதாவது இரு நாய்கள் சண்டையிடுவதை அறிந்தால், ஓடிச்சென்று இடைப்பட்டுச் சண்டையை அது ஒழிக்கும். பின்னர், இரு சண்டை நாய்களையும் எவ்வழியிலும் நேசமாக்க முயலும். பலர் இதனைப் பார்த்து அதிசயப்படுகின்றனர். இந்த உலகத்து வல்லரசுகளிடையும் இந்நாயின் அறிவு படைத்த ஒருவர் உளரேல், ஆயுத முஸ்தீப்புகளேன், ஆயுதப் பரிகரணமேன்?

## ஸ்ரீமுக௵ மாசி மாச நக்ஷத்திர ராசிப்பலன்.

— (*) —

[பிரமஸ்ரீ ச. சுப்பிரமணிய சாஸ்திரிகள் வாக்கிய பஞ்சாங்கத்திற் கண்டபடி.]

அச்சுவினி, பரணி கார்த்திகைமுதற்கால்களிற் பிறந்தவர்களுக்கு,

வாகனக் கஷ்டம், சுபகாரியப பேறு, அபகீர்த்தி, உரிமைப் பொருள் கிடைத்தல்.

கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி, மிருகசீரிட முன்னரைகளிற் பிறந்தவர்களுக்கு:

இனத்தவரால் மனக்கவலை, சத்துருக்களாற் செலவு, பூமிப்பலிதம், தொழில் கஷ்டம்.

மிருகசீரிடப் பின்னரை திருவாதிரை புனர்பூச முன்முக்கால்களிற் பிறந்தவர்களுக்கு:

பெரியோர் நிந்தை, பொருட் செலவு, துஷ்டர் சேர்க்கையால் ஆபத்து, காரிய விக்கினம், புத்திமறதி,

புனர் பூசத்து நாலாங்கால் பூசம் ஆயிலியங்களிற் பிறந்தவர்களுக்கு:

பித்திரரால் துயரம், புத்தி விருத்தி, தேக சுகக் குறைவு, தொழில் கஷ்டம்,

மகம் பூரம் உத்தர முதற்கால்களிற் பிறந்தவர்களுக்கு:

களத்திரவிரோதம், மனச் சோர்வு, ஸ்திரீகளாற் செலவு, களத்திரவழியாருடன் பகை;

உத்தரப் பின்முக்கால் அத்தம் சித்திரை முன்னரைகளிற் பிறந்தவர்களுக்கு:

இழந்த பொருள் கிடைத்தல், பூமிலாபம், குடும்ப மகிழ்ச்சி, வாகன சுகம், (உத்தரத்திற் பிறந்தார்க்கு மனக்கவலை, கஷ்டபலன்.)

சித்திரைப் பின்னரை சோதி விசாகத்து முன்முக்கால்களிற் பிறந்தவர்களுக்கு:

புத்திர களத்திர சுகக்குறைவு, தொழில் ஒற்றுமை, மித்திரர்க்காபத்து, பிறதேச சஞ்சாரம்.

விசாகத்து நாலாங்கால் அனுடம் கேட்டைகளிற் பிறந்தவர்களுக்கு:

மாதாவுக்கு நோய் வந்து மாறுதல், தாரசுகக் குறைவு, அற்பலாபம்.

மூலம், பூராடம், உத்தராட முதற்கால்களிற் பிறந்தவர்களுக்கு:

இன வொற்றுமை குறைவு, சத்துருக்களாற் கவலை, தார பீடை, பொருள்வரவு.

உத்தராடப் பின்முக்கால் திருவோணம் அவிட்டத்து முன்னரைகளிற் பிறந்தவர்களுக்கு:

இனத்தாரிரக்கம், தொழிலினால் நஷ்டம், அவமானம், அற்பலாபம், செலவு,

அவிட்டத்துப் பின்னரை சதயம் பூரட்டாதி முன்முக்கால்களிற் பிறந்தவர்களுக்கு:

பிறரால் புகழப்படுதல், சரீரபீடை, களத்திர வேற்றுமை, களத்திரரால பல கஷ்டங்கள்.

பூரட்டாதி நாலாங்கால் உத்தரட்டாதி, ரேவதிகளிற் பிறந்தவர்களுக்கு:

களத்திர புத்திரரால் துன்பம், தொழிற் சித்தியால் அதிக வரவு வரினும் வரவினும் மிகுந்த செலவு, சத்துருபயம், ஆயுதபயம்.

இந்துசாதனம்.

யாழ்ப்பாணம்: ஸ்ரீமுகஞூ
தைமீ ௨௩௨ திங்கட்கிழமை.

## 'நெஞ்சையொளித்தொரு வஞ்சகமில்லை'

யாழ்ப்பாணத்துள்ள தமிழ்மக்கள் புதிய அரசாங்கசபையைப் பகிஷ்காரஞ் செய்த நோக்கம் மிக மேலானதென்பது எல்லாரும் அறிந்த இரகசியம். இதனைப் பகிஷ்காரஞ்செய்த காலத்தில் யாழ்ப்பாணமக்களெல்லாரும் ஒரே கொள்கையும் ஒரேவிதமான பிடிவாதமும் உள்ளவர்களாகவே காணப்பட்டனர். அரசினருடைய கொள்கைக்கும் விருப்பத்திற்கும் மாறுக அரசாங்க சபையைப் பகிஷ்காரஞ் செய்யும்போது சில சில வசதியீனங்கள் நஷ்டங்கள் தமிழ்மக்களுக்குச் சில காலத்திற்கேனும் நேருதல் கூடுமென்பது ஆரம்பத்திலேயே தமிழ்மக்கள் அனைவருக்குந் தெரியும். நல்ல கருமங்களைச் செய்யத் தொடங்கும்போது, சுவாதீனத்தை அடைய முயற்சிசெய்யும்போது பெரிய இடையூறுகள் வருவது சகசந்தானே. "நகம் நனையாமல் நத்தைபிடித்தல் முடியுமா" என்பது பழமொழி. ஆனாலும் இவைகளையெல்லாம் அறிந்துகொண்டும் அறியார்போல, கோடரிக்காம்புபோல்வார் சிலர் தனித்தனி சுயநலத்தையே கருதிச் செய்யத் தொடங்கிய அடாத செயல்கள், நிறைவேறுமானால் அவை தமிழ்மக்களுக்கு எக்காலத்தும் தீரா வசையை ஆக்கிவிடத்தக்கன. எங்ஙனம் முயற்சிசெய்தாலும், பிரேரணைநாள் ஒன்று அரசினரால், சமீபகாலத்தில் நியமிக்கப்பட்டாலும், தேசத்திற்கும் சாதிக்கும் துரோகஞ் செய்யத் தலைப்பட்ட அந்தச் சுயநலப்புலிகள் தாங்களே அரசாங்கசபையிற்போய்ப் புகலாம், வேதனம் பெறலாம், தம்மவருக்கு எதும் உத்தியோகந் தேடிக்கொடுக்கலாம் என்ற இந்த வீண் எண்ணங்களை விட்டுவிட வேண்டும். அவர்கள் அச்சபையிற் புகுவதும் தம் சுயநல மனோரதங்களை நிறைவேற்றுவதும் அசாத்தியமான காரியமென்பதை அறியக்கடவர்.

இனி, இந்தச் சில தமிழர்கள் தேசாதிபதியையும், இலங்கை மகா மந்திரியையும் ஒருமுறையல்ல, இருமுறையல்ல, மும்முறை ஒரு பிரேரணைத் திருநாள் தரவேண்டுமென்று உலுத்தத்தனமாகக் கேட்டபோது அந்த மூன்றுமுறையும் கொடுக்கமாட்டோமெனப் பிடிவாதஞ்செய்த நமது அரசினர் இப்பொழுது பிரேரணைநாள் நியமிப்பதற்குத் துணிந்தகாரணமென்னை? வேறொன்றுமன்று, பிரித்தாளுதலாகிய தங்களுக்குக் கைவந்த அந்த முறையை அரசினர் இப்பொழுது கைக்கொள்ளவேண்டி வந்துவிட்டது போலும். என்? சிங்களமக்கள், குறித்த அரசாங்கசபையில் மந்திரிமாருக்கும் அங்கத்தவர்க்கும் எவ்வகையான சுவாதீனமும் இல்லையென்றும் தேசாதிபதிக்கு மேலான சுயேச்சாதிகாரம் இருக்கின்றதென்றும் கண்டு இந்த அரசாங்கசபையில் பல திருத்தங்களைச் செய்யவேண்டுமென்ற நோக்கத்தோடு ஒரு திருத்தப் பிரேரணையை எடுத்தாளலாயினர் இதனைக்கண்டு அரசினர் வெருண்டு இங்குள்ள தொகையிற் குறைந்த சாதியாரின் உதவியை அபேட்சித்து நிற்கின்றனர் இதன்பயனாகவே ஒருபோது பிரேரணைத் திருநாள் இச்சில தமிழ்மக்களுக்குக் கிடைக்கின்றது போலும். கொழும்பிலும் இங்குமுள்ள குறித்த சில தமிழர்கள் அங்குள்ள சகிராக்கல்லூரியில் ஒரு போலி மகாநாடு கூட்டி, தாங்கள் தமிழ்மக்களின் அபிப்பிராயத்தையே எடுத்துச் சொல்லுவதாக நடித்து, தங்களுள் எவர்க்கேனும் பிரதிநிதித்துவம் கிடைக்குமாயின் (கிடைத்தல் அரிது) தங்கள் சகோதராகிய சிங்களருக்கு மாறுக வேலைசெய்யத் துணிந்திருக்கின்றனர். இவர்கள் அரசினரையடைந்து "மீளா அடிமை உமக்கே யாளாய்" என்று சொல்லி வணங்கி ஒதுங்கிநிற்கப் பின்னிற்கமாட்டார்கள். இங்குள்ள தங்கள் சகோதரருக்கும் அயலிலுள்ள சிங்களச்சகோதரர்க்கும் துரோகஞ்செய்யக் கூசார்கள். "ஆசைவெட்கமறியாது" என்றவிதமாக இவர்கள் செய்யுஞ் செய்கைகள் எல்லாம் தமக்கும் தம் சகோதரர்க்கும் இந்த நாடு முழுவதற்கும் தீமை தருவனவல்லாமல் நன்மை தருவனவல்ல என்பதை யோசிக்கின்றார்களில்லை.

இந்தச் சிலர் உண்மையான அபிமானமுடையவர்களானால், உண்மையில் தமது சாதி தேசம் என்னுமிவற்றின் நன்மையை நாடுபவரானால், தமிழ் மக்களின் கௌரவத்தை எந்தக் காலத்தும் பாதுகாக்கவேண்டுமென்ற எண்ணத்தை நிசமாகக் கொண்டவரானால், "ஆக்கப் பொறுத்தவர் ஆறப் பொறுக்க வொண்ணாதா" என்றபிரகாரம் சென்ற மூன்று முன்றரை வருடம் வரையிற் பொறுத்திருந்தவர்கள், அரசாங்க சபையிற் போய்ப் புகுதற்கு இன்னமும் ஒன்று ஒன்றரை வருடந்தானே உண்டு, அத்துணைக் காலம் பல்லைக்கடித்துக்கொண்டு பொறுத்திருந்து தம் சகோதரருடன் பிணக்குப்படாமல் ஒத்துக் கருமம் பார்க்கமாட்டார்களா? இவர்களுடைய நோக்கம் உண்மையாக அவைபல்ல. இங்குள்ள பழைய சனத்தலைவர்கள் யாரும் பிரதிநிதிகளாய்த் தெரிதல் செய்யப்பட்டு அரசாங்கசபைக்குப் போவாராயின், இம்மையில் ஒருபோதும் தாங்கள் அரசாங்கசபை அங்கத்தவராய் வருதல் முடியாதென்ற நோக்கமே இவர்கள் உள்ளத்தைப் பாதிக்கின்றது.

இவர்களுடைய துரோகச்செயல்களையும் அக்கிரமங்களையும் பின்னரும் எடுத்துக் காட்டுவேம்.

---

### கால நிலை.

*பனியும் வெயிலும் இத்தவாரம் அதிகமாகும். வயல்களில் அதிகமாக நீர்நிற்பதால் அருவி வைகியெதற்குக் கமக்காரர் பின்னிற்கின்றனர்.*

---

### ரங்கசாமி ஐயங்கார் இறந்தார்.

பிரபல தேசியவாதியும் சென்னை ஹிந்துப் பத்திராசிரியரும், வட்டமேசை மகாநாட்டுப் பிரதிநிதியுமான ஸ்ரீ A. ரங்கசுவாமி ஐயங்கார் இன்று (திங்கள்) மத்தியானம் தேகவியோகமாயினர் என்று எமக்கு இப்போது கிடைத்த தந்திச் செய்தி கூறுகிறது. இறக்தபோது ஸ்ரீ ஐயங்காருக்கு வயது 57 ஆகும்.

---

### "களறிக்கல் பரீக்ஷை"

ஒரு கட்டுப்பாடு.

*பரீக்ஷார்த்தி சில சமயங்களில் ஒருவராயிருக்கவும், பரீக்ஷை எடாத இன்னொருவர் அவருக்காக அவரின் பெயரைக்கொண்டு விடைகளை எழுதி அரசினரை ஏமாற்றமுயன்றால், அதனைத் தடுப்பதற்குப் பரீக்ஷார்த்திகளால் அனுப்பப்படும் விண்ணப்பம் அரசினர் உத்தியோகத்திலிருப்பவர்களால் அனுப்பப்படும் போது அப்பகுதித் தலைவராலும், மற்றவர்களால் அனுப்பப்படும் போது சமாதான நீதவானாலும் மேலொப்பமிடப் படவேண்டுமெனக் கட்டுப்படுத்தியிருக்கின்றனர். அன்றியும் பரீட்சை நடக்கும் ஒவ்வொருநாளும் பரீக்ஷார்த்திகள் கையொப்பமிடவேண்டிவரும். பரீக்ஷை இந்த மாதம் 20-ந் திகதி தொடக்கம் 23-ந் திகதி முடிய நடைபெறும். கொழும்பில் ஆறு இடங்களில் பரீக்ஷை நடத்துவதாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.*

---

### மத்திய வாசிகசாலையும் நூற்கழகமும்.

*யாழ்ப்பாணத்தில் எவர்க்கும் வசதியான ஒரு பொது இடத்தில் ஓர் இலவச தமிழ் வாசிகசாலையையும் நூற்கழகத்தையும் நிறுவ வேண்டுமென்று ஸ்ரீ க. மு. செல்லப்பா அவர்கள் பகிரதப் பிரயத்தனஞ் செய்து வருதலைப் பலர் அறிவரென நினைக்கின்றேம். இந்நூற் கழகத்தின்கண் இக்காலத்து அகப்படக்கூடிய தமிழ் ஆங்கிலப் புத்தகங்கள் மாத்திரமல்லாமல், பழைய ஏட்டுப் பிரதிகளையும் இயன்றவரையிற் சேகரித்து வைக்க வேண்டுமென்பது அவருடைய நோக்கம். இந்த நன்முயற்சிக்குப் பலர் இயன்ற உதவி செய்கின்றார்கள். ஏனைய அபிமானிகளும் இவ்விஷயத்தில் தங்கள் தங்களால் இயன்ற உதவி செய்யவேண்டுமென்று அவர் கேட்கின்றார். குறித்த நிலையத்தை நிறுவும் ஸ்தானம், பொருளுதவி செய்வோரின் மகாநாடொன்று கூட்டி அவர்கள் நிர்ணயித்தபடியே அமைக்கப்படுமெனவும் அவர் வாயிலாக அறியலானேம். ஸ்ரீ செல்லப்பாவின் முயற்சி இனிது அநுகூலமுறுவதாக.*

---

# இந்து சமய வரலாறு.

ஸ்ரீ. க. நவரத்தினம் அவர்கள் எழுதியது.

### வேதங்களின் பழமை.

இந்துசமய முதல் நூல்களாகிய வேதங்கள் உலகிலுள்ள இந்திய ஐரோப்பிய (Indo-European) பிரிவினரின் இலக்கியங்களுள் எல்லாம் மிகப்பழமை பொருந்தியன என்பது ஆராய்ச்சிவல்லார் முடிபாகும். இவ்வேதங்கள் எக்காலத்தில் முதன்முதல் தோன்றினவென்பது ஆராய்ச்சிக்கு எட்டாததாய் இருக்கின்றது. மனிதன் உலகில் தோன்றிய காலம் எதுவோ அக்காலந்தொட்டு வேதங்களும் உள்ளனவென்று கூறுதல் பிழையன்று. மனிதன் சூரிய சந்திர நட்சத்திரங்களையும், இடி மின்னல் மழையையும், இருண்டுபரந்த மேகங்களையும், அழகிய சிவந்த சூரிய அஸ்தமனத்தையும், அமைதி நிறைந்த வைகறைப்பொழுதையும் எவ்விதம் முதல் தனது கண்களாற் கண்டு வியப்பும், பயமும், இன்பமும் அடைந்தானே அந்நிலையை வேதங்கள் எமக்குத் தெளிவாய் விரித்துக் காட்டுகின்றன. இயற்கைவனப்பையும், அவ்வனப்பு மனிதன் உள்ளத்தில் எழுப்பும் உற்சாகத்தையும் நயம்படக் கீதங்களாகப்பாடி உலகிற்களித்த பெருந்தகைமை எமது வேதமகரிஷிகளுக்கேயுள்ளது. இவ்விதக் கீதங்கள் நிறைந்த வேத சம்ஹிதைகள் எக்காலத்தன என்று முடிபுசெய்தல் இயலாத காரியமாகும்.

இந்துக்களாவார் வேதங்கள் மனிதர்களால் வரையப்பெற்ற நூல்கள் அல்லவை என்றும், அவை கடவுளால் மனிதசமூக முன்னேற்றத்தின் பொருட்டு அருளப்பெற்றசிறந்த உண்மைகளெனவுங்கொள்கின்றனர். பிரமாவின் நான்கு முகங்களிலிருந்தும் நான்கு வேதங்கள் தோன்றியனவென்பது புராணக்கதை. பிரமாவினால் தோற்றுவிக்கப்பெற்ற வேதங்களை வேதவியாசர் கலியுக ஆரம்பத்தில் நான்காகத்தொகுத்தனரென இதிகாசங்களும் புராணங்களும் கூறுகின்றன. "மறைநான்குமானாய்" என வருந்தேவார மொழிகளாற் பரமபதியாகிய சிவபரம்பொருளே நான்கு வேதங்களாகத் திகழ்கின்றது என்பதுவும் பெறப்படுகின்றது.

சரித்திர நூலாராய்ச்சிக்காரரும், வடமொழி இலக்கியவரலாற்றினைத் தொகுத்த புலவர்களும் வேதங்களின் காலத்தைப் பலபடக் கூறுகின்றனர். வடமொழி இலக்கிய ஆராய்ச்சியில் தலைசிறந்து விளங்கிய பண்டிதர் மாக்ஸ்முல்லர் (Max Muller) வேதங்கள் கிறிஸ்து பிறப்பதற்கு 1200 ஆண்டுகளுக்கு முன் தொகுக்கப்பட்டனவென்று கூறினர். டாக்டர் ஹோக் (Haug) வேதகாலம் கி. மு. 2400 எனவும், காலஞ்சென்ற பாலகங்காதரதிலகர் கி. மு. 4000 எனவுங் கூறிப்போந்தனர். வேதங்களிற் காணுஞ் சோதிடக் குறிப்புக்களைக்கொண்டே திலகர் வேதகாலத்தை நிர்ணயித்தனர். கற்கத்தா சர்வகலாசாலைச் சரித்திர நூலாராய்ச்சி ஆசிரியர் அபிநாஸ் சந்திரதாசர் வேதமந்திரங்கள் 20,000 ஆண்டுகளாக வளர்ச்சியடைந்து 5000 ஆண்டுகளுக்கு முன்னர் வியாசரால் தொகுக்கப்பட்டனவெனத் தமது "இருக்கு வேதகால அறிவுவளர்ச்சி" என்னுஞ் சிறந்த நூலின்கண் கூறுகின்றனர். வேறுசிலர் கி. மு. 3000, அல்லது 3500 ஆண்டுகள் வரையில் வேதங்கள் தொகுக்கப்பட்டன எனவுங் கருதுகின்றனர். கலியுகத்திற் சென்ற ஆண்டுகள் 5034 எனக் கொள்வோமாயின் யுகவாரம்பத்தில் வேதவியாசர் வேதங்களை நான்குபகுதிகளாகத் தொகுத்தனர் என்னும் புராணக்கொள்கை நவீன ஆராய்ச்சியாளர்கள் கொள்கையுடன் பொருத்தமுடையதாயிருப்பது எம்மாற் குறிப்பிடத்தக்கதே.

வேதங்கள் வரிவடிவாக வருதற்குமுன் நீண்டகாலங்களாகப் பல ரிஷிகுடும்பங்களால் மனனஞ்செய்யப்பட்டே வந்தன எந்த ரிஷி ஆதியிற் கீதங்களை ஆக்கினரோ அந்த ரிஷிகுடும்பத்தினரே அக்கீதங்களை மனனஞ்செய்து பிற்சந்ததியாருக் களித்தனர். நெடுங்காலங்களாக மனனஞ் செய்யப்பட்டுவந்த இவ்வேதங்கள் இடைச்சொருகலும் தவறான உச்சாரணமும் மலியாது இற்றைவரை சிறப்புடன் இருப்பதே பூர்வீக மக்கள் இவ்வேதங்களை எவ்விதம் போற்றிக்காத்து எமக்கு அளித்திருக்கின்றனர் என்பதற்குத் தக்கசான்றாகும்.

### வேதங்களின் பிரிவுகள்.

வேதங்கள் நான்கு கூறுகப் பிரிக்கப்பட்டுள்ளன. அவை இருக்கு, யஜுர், சாமம், அதர்வணம் என்பனவாம். இவ்வேதங்கள் பல சாகைகளை உடையனவாய் இருந்தனவென்பது பதஞ்சலி முனிவரின் மகாபாடியத்திலும், முக்திகோபநிஷத்திலுங் கூறப்படுகின்றது. மகாபாடியத்தில் இருக்கு வேதத்திற்கு இருபத்தொரு சாகைகளும், யஜுர் வேதத்திற்கு நூறுசாகைகளும், சாமவேதத்திற்கு ஆயிரஞ் சாகைகளும், அதர்வணவேதத்திற்கு ஒன்பது சாகைகளுங் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. முக்திகோபநிஷதம் இருக்கு வேதத்திற்கு 21 சாகைகளையும், யஜுர் வேதத்திற்கு 102 சாகைகளையும், சாம வேதத்திற்கு 1000 சாகைகளையும், அதர்வண வேதத்திற்கு 50 சாகைகளையுங் கூறுகின்றது. இச்சாகைகளில் மிகச்சிலவே இப்பொழுது கிடைத்தற்குரியன.

ஒவ்வொரு வேதமும் சம்ஹிதைகளெனவும், பிராமணங்களெனவும், ஆரண்யங்களெனவும், உபநிஷத்துக்களெனவும் வகுக்கப்பட்டிருக்கின்றது.

### சம்ஹிதைகள்.

சூக்தங்கள் அல்லது கீதங்களின்தொகுதியே சம்ஹிதைகளாவன.

இத்தொகுதியைச் சேர்ந்த கீதங்களே ஹோமகுண்டத்துட் பொருள்களை இடும் வேளைகளிலும், மற்றும் யாகாதி கர்மங்களைச் செய்யும்பொழுதும் ஓதப்படும்மந்திரங்களாவன.

இருக்குவேத சம்ஹிதையில் 1017 சூக்தங்கள் 10 மண்டலங்களாகத் தொகுக்கப்பட்டுள்ளன இச்சூக்தங்கள் யாககுண்டத்துள் அவிப்பாகங்களை இடுவதற்காக நியமித்துள்ள ஹோத என்னும் ஆசாரியனால் ஓதப்படுவன. பெரும்பாகமான மந்திரங்கள் தேவர்களை நோக்கியே சொல்லப்படுகின்றன.

யஜுர்வேத சம்ஹிதையில் 1886 சுலோகங்கள் 40 அத்தியாயங்களாக வகுக்கப்பட்டுள்ளன. இவ்வேதம் கிருஷ்ண அல்லது தைத்திரிய என்றும், சுக்கில அல்லது வாஜஸ்நேய என்றும் பிரிக்கப்படும். தைத்திரியபாகம் சம்ஹிதைகளும், பிராமணங்களுமொன்றாய்க் கலந்தனவாயுள்ளது. வாஜஸ்நேயத்தில் பிராமணங்களும் சம்ஹிதைகளும் தனித்தனியாகவுள்ளன. யஜுர் வேத மந்திரங்கள் யாகசாலைக்கு வேண்டிய ஓமகுண்டம், கிரியைப்பொருள்கள், முதலியனவற்றைச் சேகரித்து வைக்கும் காலங்களில் "அத்வர்யு" என்னுமாசாரியனால் ஓதப்படுவன. இராசசூயயாகம், அசுவமேதயாகம் முதலிய விசேஷ யாகங்களின் ஒழுங்குகள் இவ்வேதத்திற் காணப்படும்

சாமவேத சம்ஹிதைகள் 32 அத்தியாயங்களைக்கொண்ட 15 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. இச்சம்ஹிதையில் 460 கீதங்களுள்ளன. சாமவேத கீதங்களுள் 75 கீதங்களைத் தவிர்த்து எஞ்சிய யாவும் இருக்கு வேத சம்ஹிதையிற் காணப்படுவனவாம். சோமபானத்தை நிவேதனஞ் செய்யுங் காலத்து "உத்கா" என்னும் ஆசாரியனால் சாமவேதம் ஓதப்படுவதாகும்.

அதர்வணவேத சம்ஹிதைகள் 731 கீதங்களைக்கொண்ட 20 காண்டங்களாக வகுக்கப்பட்டுள்ளன. ஹோத, அத்வார்யு, உத்காத, ஆகிய மூவகையாசிரியர்களால் ஏற்படக்கூடிய தவறுகளுக்குப் பிராயச்சித்தமாக பிரஹ்ம என்னும் பிரதான ஆசாரியனால் இம்மந்திரங்களோதப்படுவன.

### பிராமணங்கள்.

வேதங்களிற் கூறப்பட்டுள்ள யாகக்கிரியைகளை முறைப்படி ஆற்றுவதற்கான ஒழுங்குகளையும், இவ் யாகாதி கர்மச் சடங்குகளுடன் சம்பந்தமான கர்ணபரம்பரைக் கதைகளையும், கொண்டுள்ளனவே பிராமணங்களென்பன: இவையாவும் உரைநடையிலுள்ளன. வேதசம்ஹிதைகளுக்கும் இப்பிராமணங்களுக்குமிடையே அநேக ஆண்டுகள் சென்றிருத்தல் வேண்டுமென்பது பல ஆராய்ச்சியாளர் துணிபு: வேதங்களிலும் பார்க்க மிகவும் பிற்பட்டகாலச் சரித்திரக்குறிப்புகள் இந்நூல்களிற் காணப்படுகின்றன. சம்ஹிதைகளிற் கூறப்படாத இடங்கள் பிராமணங்களிற் காணப்படுவதால் இக்காலத்தில் வடநாட்டின் பலபகுதிகளிலும் இந்துக்கள் பரவி இருந்தனரென்பது பெறப்படுகின்றது: பிராமணங்களிற் கூறப்பட்டுள்ள கதைகளே பின் மகாபாரதத்திலும், பலபுராணங்களிலும் மிகவும் விரிவாக எடுத்து ஆளப்பெற்றிருக்கின்றன.

இருக்கு வேதத்திற்கு இரண்டு பிராமணங்களுள. அவை ஐத்திரேயபிராமணம், கௌசிதகி பிராமணம் என்பனவாம். கௌசிதகி பிராமணம் சாங்காயன பிராமணமெனவும் அழைக்கப்படுகின்றது. சோமயாகம், அக்கினி ஹோத்திரம், அரசனுக்கு முடி சூடுங் கிரியைகள் முதலியனவற்றைக் கொண்டுள்ளது, ஐத்திரேய பிராமணம்.

(தொடர்ச்சி 5-ம் பக்கம்)

# தமிழ்நாட்டுச் சங்கீதத்தின் தனிப்பெரும் சிறப்பு.

## உடல்வளர்ச்சிக்கு ஆகாராதிகள் போல உயிர்வளர்ச்சிக்குச் சங்கீதம்.

## 2000 வருடங்களுக்கு முன் உந்நதநிலையில் இருந்த தமிழ்ச் சங்கீதம்

## வீணைக்கும் மானுடதேகத்திற்கும் உள்ள ஒற்றுமை.

[ஹரிகேசவ நல்லூர் காயகசிகாமணி திருவாளர் முத்தையாபாகவதர்.]

தமிழ்நாடு எத்தனைய கலைகளைத் தான் பெருமல் இருந்தது? எந்தக் கலைகளிலும் இந்த நாடு முதன்மையாக இருந்தது; சங்கீதத்தில் மிகச் சிறப்புவாய்ந்தது. அநேக சங்கீத வித்வான்கள் இந்த நாட்டில் இருந்திருக்கிறார்கள்.

சங்கீதத்தின் சிறப்பு.

எல்லோருக்கும் ஆனந்தந்தருவது சங்கீதம். சங்கீதத்தை வேண்டாதவர் இல்லை. புல் பூண்டுகள் கூடக் கான ருசியை அறிந்து அனுபவிக்கின்றன என்றால், அது மனிதர்களுக்கு ஆனந்தந் தருவதைப்பற்றி சந்தேகம் உண்டோ? உடல்வளர்ச்சி அடைவதற்கு ஆகாராதிகள் உபயோகப் படுவது போல் உயிர்வளர்ச்சிக்குச் சங்கீதம் அவசியமானது. கானத்தைக் கேட்டவுடன் மனக்குள்ள கவலை நீங்கிவிடுகின்றது; இந்திரியங்களும் அசைவற்று நிற்கின்றன; வேலையை மறந்துவிட்டுக் கவலைகளை மறந்து கேட்கிறோம். சங்கீதம் நின்றபிறகு கவலைப் படுகிறோம்.

அந்தச் சங்கீதம் எப்பொழுது உண்டாயிற்று? யார்மூலம்வந்தது? உலகம் உண்டாவதற்கு முன் கானம் உண்டாயிற்று. கானத்திற்கு ஆதியானது நாதம். நாதத்திலிருந்தே ஸ்வரம் உண்டாயிற்று. ஆகாசம் ஸப்த வடிவமுடையது. ஆகாசத்திலிருந்தே மற்றப் பூதங்கள் உண்டாயின. ஆகாசத்துக்குச் சொந்தமான நாதத்திலிருந்தே எல்லாப் பூதங்களும் உண்டாயின. ஜீவராசிகள் எல்லாம் தங்கள் தங்கள் கருத்தை வெளியிடுவதற்கு நாதம் வேண்டும். பாஷைக்கு ஆதியாயிருப்பது நாதம். அந்தப் பாஷை ஒலி வடிவாகவும் இருக்கிறது. அந்த நாதத்திலிருந்தே வேதம் சாஸ்திரம் மந்திரம் முதலியவைகள் உண்டாயின.

மகரிஷிகளெல்லாம் மந்திரங்களைச் சொல்லி வைத்திருக்கிறார்கள். அந்த மந்திரங்களை ஜபம் செய்து மந்திரத்துக்குரிய தேவதைகளைத் தரிசனம் செய்தார்கள். அந்தத் தெய்வங்களைக் காண்பதற்கு மந்திரங்கள் உதவியாக இருக்கின்றன. தெய்வ பேதங்களுக்கு முன்பு நாதம் உண்டாயிற்று.

பரிபாடல்.

கீதமானது எவ்வளவு காலத்துக்கு முன்பு ஏற்பட்டதென்பதை அறிவது மிகவும் துர்லபம்; லக்ஷக்கணக்கான வருஷங்களாகக் கீதங்கள் இருந்து வந்திருக்கலாம்; அநேகம் பெரியோர்களால் கானம் செய்யப்பட்டு வந்திருக்கலாம். தமிழில் மிகவும் பழைய சங்கீத சாஸ்திரங்கள் பல இருந்தன. சுமார் 2000 வருஷங்களுக்கு முன்பு உண்டான பரிபாடல் என்ற பழைய தமிழ் நூலில் உள்ள பாட்டுக்களுக்கு இசை வகுக்கப் பட்டிருக்கிறது. அதில் பாட்டுப் பாடினவர் இன்னார், இசைவகுத்தவர் இன்னார் என்ற விஷயங்கள் ஒவ்வொரு பாட்டுக்கும் குறிக்கப் பட்டிருக்கின்றன. ஒருவர் சாஹித்யம் செய்வதும், வேறு ஒருவர் அதற்கு இராகதானம் அமைப்பதுமாகிய வழக்கம் இப்பொழுதும் இருக்கிறது. "இதோ நான் எனக்கு மனோபாவமாகத் தோற்றியதைப் பாட்டாகப் பாடியிருக்கிறேன்; தயவுசெய்து வர்ண மெட்டுப் போட்டு விடுங்கள்" என்று பலர் இப்பொழுதும் சொல்லுகிறார்கள். அதைப்போல அந்தக் காலத்திலும் கவிகள் மிகவும் அழகான பாட்டுக்களைப் பாடி இசை வாணர்களோடு கலந்து அப்பாட்டுக்களுக்கு இசை அமைத்துப் பாடச் செய்திருக்கிறார்கள். பரிபாடலில் ஒரு பாட்டுக் கடியில், 'பாடினவர் கீரந்தையார், இசை வகுத்தவர் நன்னாகனார்' என்று குறிக்கப் பட்டிருக்கிறது. இப்படியே ஒவ்வொரு பாட்டையும் பாடினவர், இசைவகுத்தவர் என்பவர்களின் பெயர்கள் காணப்படுகின்றன. இவைகளைப் பார்க்கும் பொழுது சங்கீத சாஹித்ய வித்வான்கள் எவ்வளவு தூரம் ஒருமைப்பட்டிருந்திருக்கிறார்களென்பது தெரிய வரும். உடலும் உயிரும்போல சாஹித்யமும் சங்கீதமும் இருக்கின்றன. இந்த உண்மையைப் பழைய தமிழ் வித்வான்கள் அறிந்திருப்பார்களென்றும், இயலும் இசையும் பிரியாமல் ஒற்றுமையாக வைத்துக் கௌரவிக்கப்பட்டன வென்றும் பரிபாடலினால் அறிகிறோம். இசையை இயலோடு அவர்கள் சேர்த்து அநுபவித்திருக்கிறார்கள்.

சிலப்பதிகாரம்.

சற்றேறக்குறைய 1500 வருஷங்களுக்கு முன் சிலப்பதிகாரம் என்ற அருமையான நூல் இளங்கோவடிகள் என்பவரால் செய்யப்பட்டது. அது சங்கீதசாஹித்தியங்களில் மிகவும் தேர்ச்சி பெற்று உலகத்திற்கு நன்மை பயக்கும்படி அவரால் இயற்றப்பட்டது. அந்த நூலிற் சங்கீதத்துக்கு உபயோகமான பல அருமையான பாகங்கள் இருக்கின்றன. சங்கீதம், வடமொழியில் நிருத்தம், கீதம், வாத்யம், என்ற மூன்றுவகையாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. அந்த மூன்றைப்பற்றிய பல அருமையான விஷயங்கள் சிலப்பதிகாரத்தில் நிறைந்து கிடக்கின்றன.

வீணையும் சரீரமும்.

வாத்தியங்களில் சிறந்தது வீணை ஒன்றுதான் என்பதை அந்தச் சிலப்பதிகாரம் மிக நன்றாகச் சொல்கிறது. மனுஷ்யனைப்போலப் பாடுவது வீணை ஒன்றுதான். சரீரத்தைக் காத்ர வீணையென்றும் வீணையைத் தாரு வீணையென்றும் சொல்வதுண்டு. இரண்டுக்கும் சாம்யம் இருக்கிறது. உடம்பே வீணைபோல அமைந்திருக்கிறது. மனுஷ்யனுடைய தலையிலிருந்து இடுப்பு வரையிலுள்ளபாகம் வீணையை ஒத்ததாக இருக்கிறது. வீணையின் குடம் போன்றது தலை. கண்ணிருக்கும் ஸ்தானத்தில் வீணையிலும் இரண்டு கண்கள் இருக்கின்றன. வாய், தந்தி மீட்டும் இடம். உடம்பிலுள்ள முதுகெலும்பை வீணாதண்டமென்பார்கள். அந்த எலும்பு சிரசிலிருந்து பின்புறம் வரையில் வந்து வளைந்து இருக்கிறது. அது இருபத்துநாலு எலும்புகளின் சேர்க்கை என்பார்கள். வீணையிலும் இருபத்துநாலு மெட்டுக்கள் இருக்கின்றன. வாதம் பித்தம் சிலேஷ்மம் என்ற மூன்று நாடிகள் உடம்பில் இருக்கின்றன. வீணையிலும் பஞ்சமம் மத்யமம் சாரணி என மூன்று தந்திகள் இருக்கின்றன. இந்த மூன்றோடு மந்த்ரத்துக்காக ஒரு தந்தியும், தாளத்துக்காக மூன்று தந்திகளும் சேர்ந்து ஏழு தந்திகள் இருக்கின்றன. இந்த ஏழு தந்திகளும் தேகத்திலுள்ள சப்த தாதுக்களைப்போல அமைந்திருக்கின்றன.

மந்திரத்துக்காக ஒரு தந்தி ஏன் ஏற்பட்டிருக்கின்றது? நான்கு வேதங்களுக்கு நாலு தந்திகள் ஏற்பட்டிருக்கின்றன. ரிக்வேதத்துக்காகப் பஞ்சமம் ஏற்பட்டிருக்கிறது. யஜுர் வேதத்துக்காக சாரணியும் சாமவேதத்துக்கு மத்தியமமும் ஏற்பட்டிருக்கின்றன. பாக்கி உள்ள அதர்வணத்திற்கு ஒன்று வேண்டுமல்லவா? அதர்வண மந்திரங்களுக்காக மந்த்ரம் என்ற தந்தி ஏற்பட்டது. அது மிகவும் கீழேயுள்ள ஸ்வரங்களைப் பேசும்.

சிலப்பதிகாரமும் சுருதி லக்ஷணமும்.

சிலப்பதிகாரத்தில் வீணையின் லக்ஷணம், வீணை வாசிக்கவேண்டிய முறை, வைணிகனுடைய லக்ஷணம் முதலியவை நன்றாகச் சொல்லப்பட்டிருக்கின்றன. அந்த அருமையான புஸ்தகத்தில் 'ஆய்ச்சியர் குரவை' என்ற ஒருபாகம் இருக்கிறது. சுருதி லக்ஷணத்தை நன்றாக அறிந்து கொள்ள வேண்டுமானால், அந்தப் பாகத்தை ஆராய்ந்து அறியவேண்டும். இப்பொழுது நடைபெறும் சங்கீத மகாநாடுகளில் அடிபிடிக்குக் காரணமாக இருக்கும் அதனுடைய நிர்த்தாரணம் அந்த இடத்தில் வேறு எங்கும் இல்லாத சிறப்போடு காணப்படுகிறது. சங்கீத வித்வான்கள் சிலப்பதிகாரத்தை நன்றாக ஆராய்ச்சி பண்ணவில்லை. ஆராய்ச்சி பண்ணினவர்களுக்கு அதில் எவ்வளவோ அருமையான இரத்னங்கள் புதைந்து கிடக்கின்றன வென்பது தெரிகிறது. யாராவது ஆராய்ச்சி செய்து சொல்லுகிறார்கள், அதற்கு மதிப்புக் கொடுப்பதில்லை. பண்டிதர்களும் சங்கீத வித்வான்களும் சேர்ந்து பழகுவதில்லை. தமிழ்ப் புஸ்தகத்தில் இவ்வளவு அருமையான சங்கதிகள் இருக்கின்றனவென்பதை சங்கீத வித்வான்கள் நம்புவதில்லை; தாங்களாக ஆராய்ச்சி செய்து அறிவது மில்லை. ஆராய்ந்து அறிந்தவர்கள் அடங்கி யிருக்கிறார்கள்.

## பிள்ளையை வெட்டிய பெண்

### தலைவேறு கால்வேறாய் வெட்டிய சண்டாளி.

### பைத்தியமா காரணம்?

மிரிகமாவைச்சேர்ந்த கெபலாவித்தை என்னும் கிராமத்தில் சேரபியா கோனு என்னும் பெண், 9மாதமுநிறைந்த தனது மகனை ஓர் கத்தியால் காலவேறு தலைவேறாக வெட்டியெறிந்தாளென்று நேற்றைத் தினம் கிடைத்த தந்திச் செய்தியொன்று கூறுகிறது. விபரம் வருமாறு:

சென்ற புதன்கிழமை பின்னேரம் ஆறு மணியளவில் சேரபியாகோனுவின் மாமி (புருஷன் தாய்) தண்ணீர் மொள்ளச் சென்றுவிட்டாள் வீட்டில் சேரபியாகோனுவும் அவளுடைய 9மாதம் நிறைந்த ஆண்குழந்தையுமே இருந்தார்கள். 15 நிமிஷஞ்சென்றபின் மாமியார்வந்து பார்த்த போது சமையலறைக்குள் குழந்தை கால்வேறு தலைவேறாக வெட்டப்பட்டுக் கிடந்ததைக் கண்டாள். சேரபியாகோனுவை ஆங்குக் காணவில்லை மாமியார் அச்சத்துடன் அவளைக் கூப்பிட்டாள். அவள் வருவதாய்க் காணவில்லை. உடனே அவள் பிணத்தைத் தூக்கி வெளிவிறாந்தைக்குக் கொண்டுவந்து கதறினாள். அவளுடைய சத்தத்தைக் கேட்டு அயலவர் யாவரும் ஓடிவந்து கோரக் காட்சியைக் கண்டு, பின் சேரபியாகோனுவைத் தேடிப் பார்த்தனர்.

சிறிதுநேரத்தின்பின் அயலவரில் ஒருவர், சேரபியாகோனு வீட்டிற்கு விறாந்தை செல்லுப்பெட்டிக்குள் ஒளித்திருக்கக் கண்டு அவளைப் பிடித்து வெளியே இழுத்துக்கொண்டு வந்தார்.

புத்தி சுவாதீனமற்றிருந்த சமையத்திலேயே இக்குரூரக்கொலையைச் சேரபியாகோனு புரிந்தாளென்றுசொல்லப்படுகிறது.

ஸ்வரங்களின் அமைப்பு

ஸ்வரம் என்பது எப்படி உண்டாயிற்று? ஈசுவரனுடைய ஐந்து முகங்களிலிருந்து ஸ்வரங்கள் உற்பத்தியாயின. 'அப்படியானால் ஐந்து ஸ்வரங்கள் தானே யுண்டாகும்?' என்று சிலர் கேட்கலாம். முதலில் ஐந்து ஸ்வரங்களே உண்டாயின. ஸ்வரங்கள் கிரகங்களைப் போன்றவை என்று சிலப்பதிகாரத்திற் சொல்லப்பட்டிருக்கிறது. வேறு எந்தப் புஸ்தகத்திலும் இந்த அருமையான விஷயம் சொல்லப்படவேயில்லை. இப்பொழுது நவக்கிரகங்கள் என்று சொல்லப்படும் கிரகங்களில் முதலில் இருந்தவை ஐந்தே. சூரியன், சந்திரன், செவ்வாய், குரு, சுக்கிரன் என்ற ஐந்துமே முன்பு உற்பத்தியானவை. 'சாயாக்கிரகங்களாகிய இராகுகேதுக்களைத் தள்ளிவிட்டால்' வாஸ்தவத்தில் ஏழு கிரகங்கள் இருக்கின்றனவே? என்று சிலர்கேட்கலாம். இந்த ஐந்தில் சேராத கிரகங்கள் சனியும் புதனும். சூரியன் பிள்ளை சனி; சந்திரன் பிள்ளை புதன். ஆகையால் முதலில் உண்டானவை ஐந்தென்றே ஏற்படுகிறது. அதைப் போலவே சப்த ஸ்வரங்களில் சட்ஜத்திலிருந்து காந்தாரமும் பஞ்சமத்திலிருந்து நிஷதமும் ஏற்பட்டன. முதல்ஸ்வரங்கள் 'ஸமபதநி' என்ற ஐந்தே. இதற்கு அறிகுறியாக யஜுர் வேதத்தில் மந்திரங்களில் மத்திமத்திலிருந்து நிஷதமென்று பஞ்சமத்துக்கு ஸ்வரம் இறங்குகிறதைப் பார்க்கலாம்.

கிரகங்கள் ஒன்பது என்றல்லவா நாம் சொல்கிறோம்? அதுபோல் ஸ்வரங்களில் ஒன்பது உண்டா என்றால், உண்டென்றே சொல்லலாம். சப்தஸ்வரங்களில் ஒன்றாகிய நிஷதமென்பது கைசிகி நிஷதமாகும். மத்திமமென்பது சுத்தமத்தியமமாகும். இந்த இரண்டிலிருந்து இராகுகேதுக்களைப் போலக் காகலி நிஷாதமும் பிரதி மத்திமமும் ஏற்பட்டன. இவ்வாறு ஸ்வரங்களின் அமைப்பானது நக்ஷத்திரங்களின் சேர்க்கையைப்போல இருக்கிறது. நக்ஷத்திரங்கள் பன்னிரண்டு இராசிகளில் சஞ்சாரம் செய்வதைப்போல இந்த ஸ்வரங்களும் பன்னிரண்டு ஸ்தானங்களில் சஞ்சாரம் செய்கின்றன. சிலப்பதிகாரத்தைப் போல சங்கீதத்துக்கென்று அமைந்த அருமையான நூலை எந்தப் பாஷையிலும் பார்க்க முடியாது. அதில் சொல்லப்பட்ட எவ்வளவோ விஷயங்களை நாம் இன்னும் நன்றாக அறிந்து கொள்ள முடியவில்லை.

தேவாரம்.

வெகு காலத்துக்குப் பிறகு சற்றேறக்குறைய ஆயிரம் வருஷங்களுக்கு முன்பு இருந்த மகா பக்தர்களாகிய பெரியவர்கள்—தேவார திருவாசகத்தின் காரண பூதர்களாகிய பெரியவர்கள்—தோன்றித் தமிழ்ப்பாட்டுகளைத் தாளத்தோடும் இராகத்தோடும் பாடி இருக்கிறார்கள். அவற்றிற்குப் பண்வகுக்கப் பட்டிருக்கிறது

## பூகம்பமும் அதன் காரணங்களும்.

——(o)——

### வானசாஸ்திரியின் விளக்கம்.

பூகம்பமும் அதன் காரணங்களும் என்பது பற்றி கல்கத்தாவைச் சேர்ந்த பவானிப்பூர் கிறிஸ்தவ வாலிப சங்கத்தில் ஆலிபூர் அப்சர்வேட்டரியைச் சேர்ந்த டாக்டர் எ. கே. தாஸ் சென்றமாதம் 28-ந் தேதியன்று பேசியபோது கூறியதாவது:—

"பூகம்ப விபத்தினால் ஜப்பான், இத்தாலி, போர்த்துகல், தென் அமெரிக்கா முதலிய தேசங்களில் நேர்ந்திருக்கும் சேதத்தைவிட அதிகசேதம் இந்தியாவில் ஏற்பட்டுவிடவில்லை. ஜப்பானில் 1703லும், 1923லும், 1927லும் உண்டான பூகம்ப விபத்துகளில் லட்சக்கணக்கான ஜனங்கள் மடிந்திருக்கிறார்கள். ஒன்றிரண்டு நிமிஷ நேரத்திற்குள் ஆயிரக்கணக்கில் ஜனங்கள் மடிந்தனர். ஒலி காற்றில் பரவுவது போல பூகம்பம் தரையின் கீழாகப்பரவுகின்றது. அலைகளைப்போலவே பூகம்பம் பூமியைத் தாக்கிக்கொண்டு செல்கின்றது. பூமியின் ஒரு இடத்தில் ஏற்படும் அதிர்ச்சியினாலும், வேகத்தினாலும், கனத்தினாலும் இறக்கத்தினாலும் பூகம்பம் ஏற்படுகிறது. தரை அதிக குளிர்ச்சியடைவதால் தரைக்கு அடியிலுள்ள மண்ணும், கற்களும் இறங்கக்கூடும். அதனால் பூமிக்கு அடியில் பள்ளங்களும் உண்டாகக்கூடும். தரைக்கு அடியிலுள்ள மணல்சரிந்துவிடுகிறது. அடர்ந்த இடங்களுக்கு மேலாகக் கனம் அதிகமாயிருந்தால்பாரந்தாங்காதவிழுந்துவிடுகிறது. அநேகமாய் பூகம்பம் மலைபடிவாரங்களுக்குச் சமீபமாகவே ஏற்படுகிறது. காற்றின் இறக்கமும் கனமும் வேகமும் பூகம்பத்துக்கு அநுகூலமாயிருக்கின்றன. ஜனவரி மாதம் 15-ந் தேதி வட இந்தியாவிலுண்டான பூகம்பவிபத்துக்கும் இக்காரணங்கள் பொருந்தும். பூகம்பம் ஏற்பட்டதற்கு முன் சில தினங்களாகவே காற்று அதிகமாய் குளிர்ந்திருந்தது. மேற்கே தரைக்கு அடியில் மணற் சரிவு ஏற்பட அநேக காரணங்களிருந்து வந்தன, காற்று சம்பந்தமான அநேக காரணங்களிருந்து வந்தன. காற்று சம்பந்தமான அநேக மாறுதல்கள் இம்மாதம் 12-ந் தேதி முதல் 14-ந் தேதி வரை வட இந்தியாவில் ஏற்பட்டு வந்தன. ராணி கஞ்சுக்குச் சமீபத்தில் பூமிக்கு அடியில் ஒரு சாக்குப்போல பள்ளம் உண்டாயிற்று. இந்தப் பள்ளத்தில் அக்கம் பக்கத்தில் பாதகம் உண்டாகி இருக்கக் கூடும். இது மேற்கு முகமாய் அதிகவேகமாக பெரும் பாகத்தை உண்டாக்கி இருக்கக் கூடும். பூகம்பம் ஏற்படும் காரணங்கள் தனைவருக்கும் தெரிந்திருந்தாலும் பூகம்பம் எந்த இடத்தில் எந்தச்சமயம் எவ்வளவு தூரம் ஏற்படக் கூடுமென்று திட்டமாகக் கண்டுபிடித்துச் சொல்ல முடியவில்லை எனினும் பெரிய பூகம்பம் எதுவும் தெரியாமற் போய் விடுவதற்கு இல்லை. அவற்றைக் கண்டு பிடிக்க கூடிய ஆராய்ச்சி வேலைகள் எவ்வளவோ செய்து வருகின்றனர். உலக முழுவதிலும் பிரதி வருடமும் சுமார் பதினாயிரம் பூமி அதிர்ச்சிகள் ஏற்படுவதாகக் கணக்கிடப்பட்டிருக்கிறது. அவற்றில் சுமார் நூறு பூமி அதிர்ச்சிகள்தான் அதிக முக்கியமானவை, ஆயிரக்கணக்கான பூமியதிர்ச்சிகள் எவரும் உணர்ந்துகொள்ள முடியாத லேசானவை. 1906 ஆம் வருஷம் ஏப்ரல்மாதம் 18-ந் தேதி கலிபோர்னியாவில் உண்டான பூகம்பம் 2300 கோடி குதிரைவேகத்தைக் கொண்டிருந்ததாகத் தெரிகிறது.

## ஆலயம் செல்கையிற் பரிதாப மரணம்.

பருத்தரையில் வசிக்கும் டச்மா கிறச்ஸி என்னும் 14 வயதுடைய ஓர் மங்கை சென்ற வெள்ளிக்கிழமையன்று காலை, டெமற்றகொடையில் உள்ள தேவாலயத்துக்குச் செல்கையில் ஓர் புகைரதத்தில் மோதுண்டு உடனே இறந்தாள்.

பண் என்பது மேளகர்த்தா இராகம், திறமென்பது ஜன்யராகம். தேவாரங்களில் சொல்லப்பட்டுள்ள பண்களின் பெயர் மிகவும் அபூர்வமாக இருக்கும். 'பழம் பஞ்சரம் தெரியுமா?' என்றால் பரிகாசம் செய்வார்கள். இப்பொழுது வடமொழிப்பெருள்ள ராகங்களே வழக்கத்தில் இருக்கின்றன. பண்களுக்கு அந்தராகங்களிற் சிலவற்றைப்பாடுகிறார்கள். நட்டராகத்துக்கு நாட்டையே பாடுகிறார்கள். தக்கேசிப் பண்ணைக் காம்போதியில் பாடுகிறார்கள். அந்த அந்தப் பண்ணுக்கு ஏற்பட்ட பழைய கட்டுப்பாடுகள் வேறு இருக்கவேண்டும். அவை இப்பொழுது தெரியவில்லை. ஆனாலும் பழைய கால முதற்கொண்டு தேவாரங்களைப் பாடிவரும் முறை ஒன்று இருக்கிறது. அதை நான் கேட்டிருக்கிறேன்,

சிறு கதைப் பகுதி.

## கல்லென்றாலுங் கணவன் புல்லென்றாலும் புருஷன் என்ற இராஜபுத்ர மங்கை.

அ. ஈஸ்பரி எழுதுவது.

ஜோட்பூர் மகாராணுவாகிய பிரதாப சிங்கன், தன்பரிவாரங்கள் புடைசூழத் தனது தலைநகரத்தை விடுத்து 50 மைலுக் கப்பாலுள்ள ஓர் நிர்மானுஷியமான கிராமத்தில் வந்து உறைகின்றான்; ஒட்டகப் படை, யானைப்படை, குதிரைப்படை, காலாட்படை முதலிய யாவும் கூடாரங்களிலேயே தங்கியிருக்கின்றன.

காலம் இரவு; கரியமேகத்தில் தாரகாகணங்கள் சூழச்சந்திரனானவன் தனது குளிர்ந்த கிரணங்களை அக்கிராமத்தின்மீது வீசுகின்றான்; கூடாரத்தைச் சுற்றியுள்ள நந்தனவனத்தில்இருந்து சுகந்தம்பொதி மந்தமாருதம் வீசுகின்றது. இயற்கையன்னையானவள் தனது சுயபொலிவுடன் கொலுவீற்றிருக்கின்றாள். மெல்லிய தென்றற்காற்றினால் மரங்களின் இளந்தளிர்கள் அசைதலாலுண்டாகும் இனியஒலி, கூடாரங்களுள் நிற்கும் குதிரைகளின் கனைப்பு, யானைகளினூர்ப்பரிப்பு என்பவற்றைவிட வேறுசத்தம் பிறப்பதாய் இல்லை.

நள்ளிரவு; கூடாரத்தில் உள்ளவர்கள் யாவரும் நித்திராதேவியின் வலைபிற்பட்டிருக்கின்றார்கள்: எங்கும்நிசப்தம். மகாராணு பிரதாபனின் கூடாரத்தினின்றும் மூன்று பேர் வெளியே வருகின்றனர். அம்மூவரது முகங்களும் முக்காடுகளினால் முழுதும் மறைக்கப்பட்டிருந்ததால், அவர்கள் யாரோ என்பதை அந்த நிலவில் யூகித்தறிய முடியவில்லை. ஆனால் அவர்களின் பாதங்களின் தண்டைகளில் இருந்து கிணீர் கிணீர் என்றொலிப்பதிலிருந்து அவர்கள் பெண்கள் என்பது புலப்படும்.

இப்பெண்கள் எங்கு செல்கின்றனர்? நள்ளிரவில், பேதைமை, அச்சம் என்பவற்றை அணிகலன்களாகக் கொள்ள வேண்டியமடவார்கள் ஆடவர் துணையின்றி, அச்சமின்றி யாண்டுச்செல்கின்றனர்?

நந்தனவனத்தைத்தாண்டி, அந்நாரியர் மூவரும் அப்பாலுள்ள ஒருசிறு கோயிலை அடைந்தனர். கோபுரவாயிலை அடைந்ததும் தங்கள் முக்காடுகளை அகற்றினர். அப்போதே யன்னவர் யாவரெனப் புலப்பட்டது. நாரியரிருவர் நடுவிற்சென்றபாவை, பிரதாபசிங்கனின் மனைவி விமலாதேவி; பிரதாபசிங்கன், 50 வயதுக்கு மேற்பட்டவனாயிருந்தும் தனது ஐந்தாம் மனைவியாக அழகிற்சிறந்த வயதிற்குறைந்த விமலாதேவியைச் சமீபகாலத்தில் மணமுடித்தான். அவளின் நவரத்தினம் இழைக்கப்பெற்ற ஒட்டியாணத்தில் கூரிய ஈட்டி சொருகப்பட்டிருந்தது. சேடியர் இருவரும் உருவிய வாளேந்தியவராக அவளைப்பின்தொடர்ந்து சென்றனர்.

II

அகிலாண்டேசுவரியின் சந்நிதானம்; தாயைக்கண்ட சேய்போல விமலாதேவி விக்கிரகத்தின்முன் அடியற்றமரமென வீழ்ந்தாள். ஆனந்தபாஷ்பம் சொரிந்தாள். சேடியர் இருவரும் தூரத்தே கண்களில் நீர்ததும்ப நின்றனர்.

சற்று நேரஞ்செல்ல இராணி எழுந்தாள். அவள் முகத்தில் ஒருவிதமான சாந்தம் புலப்பட்டது. அகிலாண்டேசுவரியின் அருட்பிரவாகத்தில் அமிழ்ந்தியவர் மனதிற் சாந்தமும், முகத்தில் மகிழ்ச்சியு மேற்படாது விடுமா?

விமலாதேவியும் பாங்கியர் இருவரும் அகிலாண்டேசுவரியின் திருவருள்பெற்று மீண்டுங்கோபுரவாயிலை நோக்கிவந்தனர். அங்கு அவர்கள் கண்ட காட்சியென்ன? அழகிய மூன்று புரவிகளில் மூன்றுவாலிபர், இப்பெண்கள் வருகையைக் காத்துநிற்பவர்போல நின்றனர். மத்தியில் அழகிய வெண்புரவியில் இவர்ந்து நின்றவனுடைய செம்மோந்தோற்றத்தையும் முகவிலாசத்தையும் நோக்கும்போது அவன் ஓர் க்ஷத்திரிய குலத்தவன் என்பதும், மற்றை இருவரும் அவன் தோழர்கள் என்பதும் புலப்படும். அர்த்தராத்திரியில் ஆடவர் மூவரைக் கண்டதும், நமது நாரீமணிகள் திகில் அடைந்து முக்காடுகளினால் முகத்தை மூடிக்கொண்டனர். அவர்கள் முக்காட்டிட்டதைக்கண்ட அழகிய வாலிபன் தன்குதிரையினின்றும் இறங்கி விமலாவுக்கு எதிரே வந்து, "கண்மணி! விமலா! என்னையும்பார்க்கவொண்ணுதென்று முக்காட்டிட்டாய்?" என்று கேட்டான். விமலா அவனுடைய கேள்விக்குத்தாஞ் சொல்லாது, அருகே உருவிய வாளுடன் வந்தபாங்கியரை நோக்கி, "யார் எனக்குத் துரோகஞ்செய்தது? எப்படிநான் இங்குவருவது இவனுக்குத் தெரியும்?" என்று கோபத்துடன் கேட்டாள்

"அப்மணி! பன்னியும் என்னை! இந்த மன்னனுடன் வந்து அதோ நிற்கும் என் காதலனாகிய ரணவீரனுக்கு எமதுவருகையைபிரகசியமாக அறிவித்தேன். அச்சண்டாளன் தான், இதை அரசனுக்குக் கூறியிருக்கின்றான் போலும்! என்னைத் துரோகம் செய்து தங்களுக்கு மனவருத்தம் கொடுக்க ஏதுவாயிருந்த அவனின்காதலை இன்றோடு நிராகரிக்கின்றேன். இதுசத்தியம்" என்றாள்பாங்கி ஒருத்தி.

இவைபெல்லாவற்றையும் செவிமடுத்த அமரசிங்கன் என்னும் க்ஷத்திரியவாலிபன் விமலாதேவியை நோக்கி, "கண்மணீ! ஏன் வீண்மனஸ்தாபம்? ஐயோ, என்முகத்தை நோக்கவொண்ணாதா? நாம் இருவரும் எம் சிறுபிராயத்திற் கூடிவிளையாடியதை, நாம் இருவரும் பரஸ்பரம் அன்பு பூண்டதை, நீ மறந்துவிட்டனையா? ஆ! காதலி! நின் தந்தையார், கேவலம் செல்வத்திற்கு ஆசைப்பட்டு நின்னைப் பிரதாபசிங்கமகாராணுவுக்கு—உனது தந்தைக்குச் சமானமான வயதுடையகிழவனுக்கு—மணமுடித்துவிட்டமையினால் நின்புத்தியும் பழுதடைந்துவிட்டதா? நான் ஓர்சிறு சமஸ்தானத்து அரசன் தான்; பிரதாபசிங்கனிலும் பார்க்கச் செல்வம், வலிமை என்பனவற்றிற் குறைந்தவன்றான்; ஆனால், காதலி! காதல் விஷயத்தில் அக்கிழவனிலும் பார்க்க நான் உயரியவனன்றோ?……………என் முகத்தைத் திருப்பிக் கொள்ளுகின்றாய்? என்று இரந்து கேட்டான்.

விமல:—அமரசிங்கா! நீ என்னை இவ்வாறு இரந்து கேட்பது நீதியீனமாகும். இதுவெல்லாம் விதியின்பயன். அந்தவிதியினைத்தடுக்கச் செழுமதிமிலைச்சிய முழுமுதற்கடவுளன்றி அரிபிரமேந்திராதிதேவர்களாலும் முடியாதே; அவ்வாறாக எம் போலியரால் என்ன செய்ய முடியும்? நான்நின்னை ஒருகாலத்திற்காதல் கொண்டது உண்மையே: ஆனால், உன்னுருவத்தையென்னிருதயத்தினின்றும் அகற்றி, அந்தஇடத்தில் அகிலாண்டேசுவரியைப் பதித்துக்கொண்டேன்; நீயும் அவ்வாறே எனதுருவத்தை நின் இருதயத்தினின்றும் அகற்றிவிடு; போ! விதியைவென்றவர் ஒருவருமில்லை.

அமர:—நான் வெல்கிறேன்: விதியென்று ஏன் வெற்றுரை புகல்கின்றாய்? நின்தந்தையின் பேராசையே நின்னை இப்படுகிழவனிடம்தள்ளியது; அதினின்றும் நான் நின்னை மீட்கிறேன்.

விமல:—அமரசிங்! பரக்கப் பேசுவதாற்பயனில்லை! எனக்கு இறைவன்பால்நம்பிக்கை வாசமுண்டு; ஊய்தவனிருக்க அம்பை நோவார்போல, இவையெல்லாமிறைவன் செயலாயிருக்க ஏன் வீணே என்தந்தையைக்குறை கூறுகின்றாய்? ஆதலால் நீ தொன்னை துபருறுது உனது இருப்பிடஞ்செல்.

அமர:—ஆ! கண்மணீ! இக்கர்ணகடூரமான மொழிகளைக் கேட்பதற்குத்தானா இக்குளிரில் இக்கள்ளிரவில் வந்தேன்! ஐயோ நின் அழகுக்கேற்ற வாலிபத்திற்கேற்ற நாயகனோடுகூடி வாழாது, இந்தக்கிழவனுக்குப் பெண்டாகவா நீவாழவேண்டும்!

விமல:—அப்ப! ஏன் வீணே உளறுகின்றாய்? அக்கினிசாட்சியாக என்பெற்றோர் எவருக்கு என்னை நாயகியாகக் கொடுத்தனரோ, அவர் எப்படிப் பட்டவராயினுமவரே என் கணவன்: ஆதலால் நீ திரும்பிச்செல். இவையெல்லாம் இறைவன் செயலென்றெண்ணு.

அமர:—இறைவன்செயல்! எனக்கு நானே இறைவன்; நீ என்னுடனேவரவேணடும்,

விமல:—இதுதானோ நீ இதுகாறும் என்மீது கொண்ட அன்பு! சீ! வெறும்காமம் வாய்ப்பட்டே இவ்வாறு பேசுகிறாய். கடவுளை நிந்தாக்ஷணை செய்யும் நின்முகத்தைப்பார்ப்பதும்துரோகமாகும்; அப்பாற் செல்.

பங்கை யுரைத்தமாற்றம் செவியடுத்த அமரசிங்கன் கோபத்துடன் சிரித்தான். "நின்னைப்பெறுது போவேனோ பார்ப்போம்" என்று விமலாதேவியை அப்படியேதூக்கிக்கொண்டு செல்ல நெருங்கி வந்தான்.

மோசம் வந்துவிட்டதென மனத்தில் விமலாதேவிஎண்ணினள். ஒட்டியாணத்தில் தகதகவென ஒலித்துக்கொண்டு இருந்தஈட்டியைக்கையிலெடுத்தாள்; சந்திரவிம்பமென்னும் அவள்முகம் கொவ்வைப்பழம் எனச்சிவந்தது "அமரசிங்! நான் ஓர்இராஜபுத்ரமங்கையென்பதை நின் மனதிற்பதித்துக்கொள்;

(தொடர்ச்சி 6-ம் பக்கம்.)


## அடைவுநகை விற்பனவு விளம்பரம்.

—:*:—

1893-ம் ஆண்டின் 8-ம இலக்கச் சட்டக்கைச் சட்டத்தின்படி லைசென்ஸ் பெற்ற அடைவு பிடிக்கும் யாழ்ப்பாணம் கொட்டடி R. கந்தையா & V. செல்லத்துரை என்பவரிடம் அடைவு வைக்கப்பட்டு இப்போது தவணை தப்பி மேற்படி சட்டத்தின் 12-ம் பிரிவின்படி பிரசித்த லேலத்தில் விற்கப்பட வேண்டிய நகைகளின் விபரம்:—

1932ஆ 10மீ

| நம். | தி. | ரூ. | பெயர். ஊர் நகையின் விபரம். |
|---|---|---|---|
| 7531 | 12 | 8 | த. இட்டினர் கொக்குவில் தட்டு ஒன்று |
| | 11-மீ | | |
| 7790 | 4 | 130 | செ. விசுவலிங்கம் கொக்குவில் செட்டிப்பூரான் அட்டியல் ஒன்று |
| 7888 | 11 | 215 | செ. விசுவலிங்கம் கொக்குவில் கயிறுலை சோடி ஒன்று |
| 7897 | 13 | 70 | சு. அருளப்பு கரையூர் செயின் ஒன்று |
| 7933 | 15 | 14 | ச. தம்பையர் கொட்டடி கூடு ஒன்று |
| 8033 | 26 | 7 | சி. வினாசித்தம்பி பக்குநேரிவ இ. ஓலை சோடி ஒன்று |
| 8044 | 26 | 260 | செ. விசுவலிங்கம் கொக்குவில் மு. அட்டியல் ஒன்று காப்பு இரண்டு |
| 8047 | 26 | 55 | மு. மு. அப்துல் காதர் சோனகதெரு டொலர் செயின் ஒன்று |
| | 12-ம்மீ | | |
| 8217 | 13 | 30 | க. ஆறுமுகம் கொட்டடி ஓலை சோடி ஒன்று |
| 8247 | 14 | 86 | க. நாகலிங்கம் கொட்டடி மு. அட்டியல் ஒன்று |
| 8252 | 15 | 7 | ஆ. சந்தையா ஆரியகுளத்தடி எனசில் தகடு கூடு ஒன்று |
| 8269 | 18 | 5 | மு. பொன்னுத்துரை கொட்டடி கூடு ஒன்று |
| 8277 | 19 | 190 | இ. வைத்தீஸ்பரன் வண்ணார்தெரு ச. கொடி ஒன்று |
| 8309 | 21 | 10 | இ. குணதுரை நாவற்குழி ஓலை சோடி ஒன்று |
| 8326 | 22 | 10 | நி. கந்தையா கொட்டடி கல் கொண்டைப்பூ ஒன்று |
| 8334 | 22 | 50 | மு. தம்பி மரக்காயர் சோனகதெரு 4 பட்டு மணிக்கோர்வை ஒன்று |
| 8356 | 24 | 40 | பி. மரியாம்பிள்ளை நாவாந்துறை பிச்சோர்க்கி ஒன்று |
| 8381 | 26 | 55 | த. சோமசுந்தரம் தட்டாதெரு மு. அட்டியல் ஒன்று |

விற்பனவு:—ஸ்ரீமுகவரு மாசிமீ 6-ந் தேதிக்குச் சரியான (17-2-34) சனிக்கிழமை காலை 10 மணியளவில் எடுபட்ட நகை பிறகேலக மிகுதி மேற்படி கடையில் பிரசித்த லேலத்தில் விற்கப்படும்.

சி. இடம்பின்னை உடையார்
லேக்கிஸ்மேஸ்தர்,

(Mis. 195. 1&5-2-34)




எதிர்பாருங்கள்! எதிர்பாருங்கள்!

றங்கூன் தேக்கமரங்கள்.    பெயர்பெற்ற "பவுண்மார்க் ஓடுகள்."

தற்போது போனந்தவல்லி என்னும் கப்பலில் புதிதாக தேக்கமரங்களும், சிலாகைகளும் எங்களுக்கு வந்திருப்பதால் வருகிற திங்கட்கிழமை (5—2—34) பெரியகடையிலுள்ள எங்கள் ஸ்ரோரில் பெற்றுக்கொள்ளலாம்.

திறமான
பவுண்மார்க் ஓடுகள்.



இன்னும் ஏறக்குறைய ஒரு வாரத்தால் யாழ்ப்பாணம் ரேகில் சகாயவிலைக்குப் பெற்றுக்கொள்ளலாம். தேவையானவர்கள் முந்திய அறிவிக்கவேண்டியது.

சி. வீரகத்திப்பிள்ளை அன் சன்ஸ்.
Phone No. 93.    யாழ்ப்பாணம்.

(Y. 3. 26-4-34).



இன்னும் ஒருவாரத்திற்கிடையில்
இங்கு வரவிருக்கும் "கொக்ரா" என்னும் கப்பலில்

100000 குடைமார்க்கு ஓடுகள்

வருகின்றன.

இப்போதே ஆர்டர்கள் கொடுத்தால்,
மலிந்தவிலையிற் பெற்றுக்கொள்ளலாம்.
தற்போது உலவும் ஓடுகளில் இந்த ஓடுகளே சிறந்தன.
பிரதான அம்சங்கள்: தண்ணீர் கசியாது; தூசி அடிக்காது
தண்ணீரை உறுஞ்சாது; விசாலம் பெரிது;
100 சதுர அடி விஸ்தீரணத்திற்கு 118 ஓடுகள் போதுமானவை.
விபரங்களை உடனே பின்வருவோரிடம் அறிக.

மெசர்ஸ் செருபிம் பிறதர்ஸ்,
Y. 12—7-5-34    தனி ஏசண்டர், பெரியதெரு, யாழ்ப்பாணம்.

# கஷ்டத்தில் உதவி செய்மின்!

## ஜவஹர்லாலின் வேண்டுகோள்.

### இலங்கையர்க்குக் கடிதம்.

பண்டிதர் ஜவஹர்லாலிடம் இருந்து தமக்குக் கிடைத்த பின்வரும் மனுவை, கொழும்பு நியாயதுரந்தரர் ஸ்ரீ எஸ். சோமசுந்தரம் எமக்கு அனுப்பியுள்ளார். பண்டிதரின் வேண்டுகோள் இலங்கையர் அனைவராலும் சிந்திக்கப்படும் என்பதே எமது நம்பிக்கை:

"பீகார் மாகாணத்தில் ஏற்பட்ட பயங்கரமான பூகம்பத்தினால், அம்மாகாண மக்கள் சொல்லொணாத் துன்பங்களுக்குள்ளாகி வருந்துகின்றனர். அவர்களுக்கு உதவிசெய்யும்படி இலங்கையிற் பிரசுரமாகும் பத்திரிகைகளையும், போதமக்களையும் உம்மூலமாகக் கேட்டுக்கொள்ளுகிறேன். பீகார் மாகாணத்திற் பல்லாயிரக்கணக்கானோர் இறந்தனர். அநேக மக்கள் இருக்க இல்லமின்றித் தவிக்கின்றனர். அவர்களுக்கு உதவி செய்தல் ஆவசியகம். பணம் பாட்னா மத்திய சகாய நிதித் தலைவர் பாபு இராஜேந்திரப் பிரசாத்திற்கு அல்லது விரும்பினால் எனக்கு அனுப்பலாம்.

இங்ஙனம்,
ஜவஹர்லால்நேரு.

# அன்பர்களே! சிந்தியுங்கள்!

எமது தாய் நாட்டார் பூகம்ப அநர்த்தத்தில் அகப்பட்டுப் படுங்கஷ்டங்களை நாடோறும் பத்திரிகைகளிற் படித்த பின், நாம் அன்னவருக்கு உதவி செய்யாதிருக்கலாமா? உதாரத்துவத்தில் தலைசிறந்த தமிழ் மக்களல்லவா நாம் எல்லோரும்! காலதாமதத்தால் ஆம்பயன் இல்லை. ஆதலால், தங்களால் இயன்ற பண உதவியைச் செய்யுங்கள்! சிறுதுளி பெருவெள்ளமாய் முடியும். போம்பொழுது அருந்துணை புரிந்த புண்ணியம் என்பதை மனத்திற் கொண்டு, தங்கள் தருமத்தை இந்த இந்துசாதனலயத்திற்குத் தாமதமின்றி அனுப்புங்கள்.

எம்மால் ஆரம்பிக்கப்பட்ட பூகம்பசேத சகாயநிதிக்கு இற்றைவரை உதவியவர்கள் வருமாறு:—

| | ரூ. | ச. |
|---|---|---|
| முன்னர் உபகரிக்கப்பட்டது:- | 103 | 25 |
| ஸ்ரீ K. அருளம்பலம் | 2 | 00 |
| ,, C. பொன்னம்பலம் | 2 | 00 |
| ,, V. K. ஞானசுந்தரம் | 2 | 00 |
| ,, T. குமாரசாமி | 1 | 00 |
| ,, R. சின்னத்துரை | 1 | 00 |
| ,, R. R. நல்லையா | 2 | 50 |
| ,, A. கனகசபை | 2 | 00 |
| ,, T. முத்துச்சாமிப்பிள்ளை | 2 | 00 |
| ,, C. கணபதிப்பிள்ளை | 1 | 00 |
| ,, S. பதஞ்சலி | 2 | 00 |
| ,, P. J. சுவாம்பிள்ளை | 1 | 00 |
| ,, S. அப்துல்காதர் | 1 | 00 |
| ,, P. K. சோமசுந்தரம் | 1 | 00 |
| ,, W. M. S. தம்பு | 1 | 00 |
| ,, S. கனகசபை | 2 | 00 |
| ,, V. இராமலிங்கம் | 1 | 00 |
| ,, M. கதிரவேலு | 1 | 00 |
| ,, C. C. சோமசேகரம் | 1 | 00 |
| ,, A. S. வனிசகுரியர் | 1 | 00 |
| ,, K. S. செல்லப்பா | 1 | 00 |
| ,, G. G. பொன்னம்பலம் | 2 | 00 |
| ,, K. ஐயாத்துரை | 2 | 00 |
| ,, S. கந்தவனம் | 1 | 00 |
| ,, S. கனகசபாபதி | 1 | 50 |
| ,, செ. மு. ப. சிதம்பரநாதச் செட்டியார் | 2 | 00 |
| ,, யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி ஆசிரியர்கள் | 32 | 25 |
| ,, வண்ணைவைத்தீஸ்வரவித்தியாலய ஆசிரியர்கள் (2-ம் பகுதி) | 16 | 51 |
| ,, மெசர்ஸ் வீரகத்திப்பிள்ளை அன்சன்ஸ் | 5 | 00 |
| ,, க. சுந்தரஞானம் (காயன்மார்கட்டு சின்னக்கடை செல்வியாபாரம்) | 5 | 00 |
| ,, S. இராமசாமி (தொண்டமானாறு) | 5 | 00 |
| ,, பொ. இராஜகோபால் | 2 | 50 |
| ,, E. கதிரவேலு | 1 | 00 |
| ,, P. தம்பிப்பிள்ளை (பொலிஸ்தானம்) | 1 | 00 |
| ,, M. குமாரசுவாமிப்பிள்ளை (பெரியகடைசெரு | 2 | 50 |
| ,, தெல்லிப்பழை மகாஜன ஆங்கிலவித்தியாசாலை ஆசிரியர்கள் | 11 | 500 |
| ,, S. சம்பந்தநாதர் (கல்லூர்) | 2 | 50 |
| ,, சாம். ஏ. சபாபதி | 10 | 0 |
| ,, மு. கதிரவேற்பிள்ளை (ஆயுர்வேதவைத்தியர்) | 10 | 00 |
| டக்டர் சி. துரையப்பா | 2 | 50 |
| ,, S. ஜேம்ஸ் (பிறக்டர்) | 2 | 00 |
| ,, சி. காசேந்திரம் | 2 | 00 |
| ஸ்ரீமதி சி. வேதநாயகம் (சீராவியடி) | 2 | 00 |
| திருநெல்வேலி சைவாசிரியர்கலாசாலை, சாதனபாடசாலைகளின் ஆசிரியர்கள் (முதற்பகுதி) | 15 | 00 |
| ஸ்ரீ V. செல்லப்பா (சுன்னாகம்) | 5 | 00 |
| ஆக ரூ. | 273-01. | |

# ஸ்ரீ தியாகராஜ சுவாமிகள் பூரண விழா.

## சங்கீத சமாஜத்தின் நன்முயற்சி

முன்னரே அறிவிக்கப்பட்டபடி, தென்னிந்திய சங்கீதத்திற்குப் புத்துயிரளித்த ஸ்ரீ தியாகராஜ சுவாமிகளின் பூரணவிழா நேற்றையத்தினம் (ஞாயிறு) பிற்பகல் 3 மணியளவில், யாழ்ப்பாணம் சங்கீத சமாஜத்தாரின் ஆதரவில் வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் ஆரம்பமாயது. நாதசுரம், வயலின், ஹார்மோனியம், மிருதங்கம் முதலாம் வாத்திய சங்கீத நிபுணர் சிலர் பஜனை செய்தனர். மேற்சொல்லப்பட்ட வாத்தியங்கள் ஒருங்கு சேர்ந்து ஸ்ரீ தியாகராஜ கீர்த்தனங்களைக் கானஞ்செய்த நவீன முறை சர்வராலும் போற்றப்பட்டது.

பஜனை முடிந்ததும் 6 மணியளவில், ஸ்ரீ சு. நடேசபிள்ளை அவர்களின் அவைத்தலைமையில் ஸ்ரீ தியாகராஜ சுவாமிகளின் சிவியத்தைப்பற்றியும் அன்னாரின் சங்கீதத் திறனைப்பற்றியும் பிரசங்கம் செய்யப்பட்டது.

தென்னிந்திய சங்கீதத்திற்குப் புத்துயிரளிக்க ஏதுவாயிருந்த கீர்த்தனங்களை இயற்றி, அவற்றின் மூலமாக இறைவனை அறிந்து, அவனருளை பணிந்து முத்தியின்பம் எய்திய ஸ்ரீ தியாகராஜ சுவாமிகளின் மகத்துவத்தைப் பற்றியும், அன்னவரின் பூரண விழாவைச் சங்கீத சமாஜத்தார் நடாத்த முன்வந்ததையைப் பற்றியும் தலைவரவர்கள் விரித்துரைத்தார். யாழ்ப்பாணத்துள்ள சங்கீதப்பிரியர், சங்கீத வித்துவான்கள் யாவரும் ஒத்துழைத்து இப்பூரணவிழாவை ஆண்டுதோறும் நடாத்திவரவேண்டுமெனவும் அவர் வேண்டிக்கொண்டார்.

இதன்பின் பிரமஸ்ரீ கணபதி ஐயர் B. A. அவர்கள் சுவாமிகளுடைய சரித்திரத்தைப்பற்றி இடையிடையே அன்னார் இயற்றிய கீர்த்தனங்களைப் பாடிப் பிரசங்கித்தார்.

சொற்பொழிவுகள் முடிந்ததும் சிலர் கீதகானஞ் செய்தனர். இதன்பின் சுவாமிகளின் திருவுருவப்படம் ஊர்வலமாக வாத்தியங்கள் முழங்க எடுத்துச் செல்லப்பட்டது.

## மாசிமாத விசேஷ தினங்கள்.

- க௳ (12-2-34) திங்கள் மகா சிவராத்திரி விரதம், பருத்தித்துறை சித்திவிநாயகர் ரதோற்சவம்
- உ௳ (13-2-34) செவ்வாய் அமாவாசை விரதம், இராமேஸ்வரம் தீர்த்தம்.
- ச௳ (15-2-34) வியாழன் கோச்செங்கட் சோழநாயனார் குருபூசை.
- அ௳ (19-2-34) திங்கள் மாத்தளை முத்துமாரியம்மன் உற்சவாரம்பம்.
- கூ௳ (20-2-34) செவ்வாய் கார்த்திகை விரதம்
- கடு௳ (26-2-34) திங்கள் பிரதோஷ விரதம்.
- கஎ௳ (28-2-34) புதன் மாசி மகம்.
- கஅ௳ (1-3-34) வியாழன் பூரணை விரதம்
- ககூ௳ (2-3-34) வெள்ளி திருவள்ளுவ நாயனார் குருபூசை
- உ0௳ (3-3-34) சனி எறிபத்த நாயனார் குருபூசை.
- உஎ௳ (10-3-34) சனி காரிநாயனார் குருபூசை.
- உகூ௳ (12-3-34) திங்கள் வண்ணை வைத்தீசுவரர் உற்சவாரம்பம்.
- ௩0௳ (12-3-34) செவ்வாய் பிரதோஷ விரதம்.

## மணமகள் பிணமானாள்.

சென்ற புதன்கிழமையன்று அவிசாவலையைச் சேர்ந்த ஒவிற்றிகமா என்னும் இடத்தில் வசித்த எமாலின் நோனா என்னும் 20 வயதுடைய சிங்கள மங்கை நஞ்சூட்டிக் கொலை செய்யப்பட்டாளென்று சொல்லப்படுகிறது. இந்தப்பெண், சென்ற புதன்கிழமை மார்டின் சிங்கோ என்பவனை மணமுடிப்பது என்று ஏற்பாடாயிருந்தது.

செவ்வாய்க்கிழமை மேற்படி பெண்ணும் அவளுடைய மாற்றாந் தாயும் ஆலயத்திற்குச் சென்றார்கள். ஆலயத்தில் இருந்து திரும்பி வந்தவுடன் எமாலின்நோனா கடுஞ் சுரங்கண்டு உடனே மரணம் எய்தினள். மாற்றாந் தாயே நஞ்சூட்டிக் கொன்றாள் என்று சந்தேகிக்கப்படுகிறது.

# இந்தியச் செய்திகள்.

## இன்னோர் இந்தியத் தேசாதிபதி?

வங்காள மாகாணத் தேசாதிபதியான சேர் ஜோன் அண்டேர்ஸன் அவர்கள் இன்னும் சில மாதங்களில் ஒருமாத லீவுபெற்று இங்கிலாந்துக்குச் செல்வார் என்றும், அவரிடத்திற்காய் சேர் பிராவஷ் சந்திரமித்தர் அவர்கள் கடமை பார்ப்பார் என்றும் வதந்தி உலவுகின்றனவென, சென்னையிற் பிரசுரமாகும் "ஹிந்து" வின் கல்கத்தா நிருபர் தெரிவிக்கின்றார்.

பிரதான இராஜதானிகளுள் ஒன்றாய வங்காளத்திற்கு ஓர் இந்தியரைப் பிரதித் தேசாதிபதியாகவேனும் நியமிப்பது போற்றற்குரியதே. சென்னை மாகாணப் பிரதித் தேசாதிபதியாய் சேர் மகமது உஸ்மான் என்னும் இந்திய முஸ்லீம் நியமிக்கப்பட்டமை ஈண்டுக் குறிப்பிடத்தக்கது.

## அடிகளின் ஆசிரம வாசிகள்.

பீகாரில் பூகம்பச் சேத நிவாரணத் தொண்டு செய்வதன் பொருட்டு மகாத்மாவின் ஆசிரமத்தில் இருந்த தொண்டர்களை அனுப்புமாறு பாபு இராஜேந்திரப் பிரசாத் அவர்கள் அடிகளுக்குச் சென்ற வியாழக்கிழமை ஓர் தந்திச் செய்தி அனுப்பியிருக்கிறார். சட்டமறுப்பின் பொருட்டுச் சிறைபுகாத தொண்டர்கள் பீகாருக்குப் போகும்படி அடிகள் பணித்துள்ளார்.

## தீண்டாமை விலக்கு மசோதா.

தீண்டாதாரின் உண்மைத் தலைவரும் இந்தியச் சட்டசபை அங்கத்தவருமான ராவ் பகதூர் எம். ஸி. ராஜா அவர்கள் எடுத்தாண்ட தீண்டாமை விலக்கு மசோதா சென்ற வியாழக்கிழமையன்று சட்டசபையில் விவாதத்திற்கு வந்தது. இந்த அங்கத்தவர்களல்லாதார் விவாதத்திற் பங்குபற்றவில்லை. பிரிட்டிஷ் நீதிஸ்தலங்களில் தீண்டாமை விலக்க வேண்டுமென்றும், சாஸ்திர சம்மதமற்ற தீண்டாமையை அரசினர் ஆதரிப்பது பிரிட்டிஷ் நீதிக்கு விரோதமானது என்றும் ராவ்பகதூர் இராஜா கூறினார். ஸ்ரீ ஹரிவிலாசசர்தா, ஸ்ரீ ஸி. எஸ். ரங்கையர், சேர். ஹரிசிங்கவுர் முதலியோர் தீர்மானத்தைப் பலமாக ஆதரித்துப் பேசினர். ஸ்ரீ அமரநாததத்தர், பூரி என்பவர்கள் மறுத்துப் பேசினர். ஈற்றில் இத்தீர்மானத்தைப் பற்றிப் பொதுஜன அபிப்பிராயம் எவ்வாறு என்பதை அறியவேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது.

# கடிதம்.

## கள்ளுண்டு களியாடும் கடையர்.

(o)

ஐயறிவுயிரினும் மேலானதொரு மெய்யறிவு கொண்ட மானுடர்க்கு, ஓர் பொய்யறிவு கொடுக்கும் பெற்றியது கள். பண்ணிய பதார்த்தம் புளித்தனவாயின் நஞ்சுவது நச்சுத்தன்மை. அளவானதிகரித்த நச்சுள்ள புளிப்படைந்த பொருள்கள் அவற்றை யுண்டவரது அறிவை உட்கொள்ளலின் அவையெல்லாம் வெறிப்பதார்த்தங்களெனப்படும்.

"மானிடப்பிறவியே யாதினுமரிதுகாண்"

என்றதற்கிணைய, நற்பிறப்பெய்திய மாந்தர் நானிலத்தில் தமக்குநதாமே கன்னாய நஞ்சேற்றி, கற்பென்னு மாடைபுரிந்து, அன்பென்னு மனக முடித்து, நாணமென்னும் நறுஞ்சாந்தை மெய்யிற் பூசி, நற்குணம் நற்செயல் என்ற ஆபரணத்தைப் பூண்டுள்ள இல்லாளோடு கூடித் தென்புலத்தார்க்கு வேண்டுவன செய்யும் நன்மக்கட் பேறென்னுஞ் செல்வத்தையுமடையாது, துறந்தார்க்குந் துவ்வாதவர்க்கும் துணையாகாது, தன் நெடுங்கால வுடல்வாழ்க்கையையுஞ் சுருக்கி முடிக்கின்றனரன்றே!

பலை தென்னை முதலியனவினும் பாளைகளை, நாரால் வரிந்து, நற்பொல்லாலடித்து, பேருகவுண்டும் பெற்றியர், வாம்பிகின்பமுடையான் பெய்கழல்கண்டு, கம் மெய் வாய் கண் மூக்குச் செவி என்ற ஐம்புலனையும் ஒருசேர நிறைப்பது எப்படி? "தவானை"யிற் தம் மடையாரொடு சென்று, ஐம்புலனும் ஒவ்வோர் காலத்தில் ஒவ்வோர் காட்சி கண்டு எய்தும் இன்பத்திலும் முன்னது மேலானதென்பதை இன்னவர் அறியார் போலும்!

அறிவை மயக்கி, மானத்தை வேர்பறித்து, நாணத்தை பொழித்து, நல்லறிவாளர் மயோத செருக்கை விளைத்து, வெகுளியை உண்டாக்கி, பகைக்கஞ்சாக் குறிகொடுத்து, நகையுமிடையுண்டாக்கி, தெய்வத்தின் மேலான தெய்வமான தேசமுடைய தன் தாய்க்கு, மனங்கோணுந் தன்மையான சொற்கொடுத்து, வஞ்சனை பொய் கொலை களவு விபசாரம் சண்டையாதிய வற்றைத் தனிபரசாக்கி விடுவது இக்கள்ளன்றே! தம்பொருளறிவு நோக்காது கூடினார்க்கும் கொடுத்துக் குடித்துக் கூத்தாடும் பட்சத்தில் சண்டையை உண்டாக்கி, "எளிய அடிமைப் பிச்சைக்காரப் பன்னான் என்னை எச்சிற்படுத்தி விட்டான்" என்ற கதைகெடமாய சொல்லை உண்டாக்குவதும் இக்கள்ளன்றே. வாழ்க்கை முழுதுங் கள்ளுண்டார் உடம்பிற்கு உளதாகும் நோய்க்கு ஈண்டேயுளதாய மருந்து சித்தியாதாகெனின், ஆண்டு அவனொடு அடையும் இன்பம் எப்படி நிலையுறும்.

இனி, அறிவில்லாத இம்மாந்தர் முன்னை வினைப் பயனுக்கேயாய் விளைந்த பொருளை அன்னையர்க்கும் ஆதுலர்க்கும் ஈயாது, மெய்நெறி கடந்து செலவு செய்து, கள்ளொடு கசிவு கொண்ட மேனாட்டாருகிய "தறப்பல்" என்ற மறுப்பெயர் பெற்றவனுக்கு அடுத்து அறத்துக் கொடுத்தலும் மிகப் பரிதாபமான காரியம். அறிவாமை யென்னும் அடர்ந்த காட்டை செறிவான தக்கர்மதியாகிய கத்திகொண்டு வெட்டி நன்னிலையெய்தும் மாந்தர் இந்நிலையினின்றுடன் ஓர் தவறான கொள்கையென அறியார் போலும். தம்மினியார்க்கும் ஒத்தார்க்கும் மிக்கார்க்கும் செய்யும் மாறான செய்கை தம்மை வெருக்கும் என்பதையும் கள்ளுண்பார் அறியார்.

கள்ளுண்ணுமொருவன் அதனை உண்ணுகிருக்கும் பொழுது, உண்ட ஒருவனைப் பார்த்துக் களிக்கிறான். அக்களிப்பிற்றானுண்டக்கால் மற்றையார் பார்த்துப் பழிக்கின்றாரோ என்பதை யறியான் போலும்!

"கள்ளுண்ணுப் போழ்திற் களித்தானைக் காணுங்கா
லுள்ளான்கொ லுண்டதன் சோர்வு"

உண்டவர்தம் அறிவை மயக்குவ கள்ளும் பிறவும், பிறவிக் கடலுள் வீழ்ந்தழுந்தயோரைக் கரையேறும் மற்றடுக்குமோர் நீர்ச்சுநிக்கொப்பென்பது யாவரும் மறுக்கத்தக்க தொன்றன்று.

ஆதலின், யாம் கள்ளையும், அதன் சிநேகிதர்களையும் எம்மோடு சகவாசஞ் செய்யவொட்டாது நீக்கி, நன்னெறி கடைப்பிடித்தொழுகுவேமாக.

வே. சிவசம்பு,
ஸ்ரீ கணேச வித்தியா விருத்திச்சங்க அங்கத்தவன்.
கல்லூர்,
31—1—34.

# இந்து சமய வரலாறு.

(2-ம்பக்கத் தொடர்ச்சி.)

நாற்பது அத்தியாயங்களை யுடையது. தைத்திரிய பிராமணம் 30 அத்தியாயங்களையுடையதாய்ச் சோம யாகங்களைப்பற்றியே கூறுவது.

யஜுர் வேதத்தைச் சேர்ந்த பிராமணங்கள் தைத்திரிய பிராமணம், சதபதபிராமணம் என்பன. தைத்திரிய பிராமணம் 3 அத்தியாயங்களையும், சதபத பிராமணம் 100 அத்தியாயங்களையும் உடையன.

சாமவேதத்திலுள்ளன தலவகாரம், பஞ்சவிம்சம், சாந்தோக்கியம் என்பன. பஞ்சவிம்சம் 25 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

அதர்வண வேதத்தில் கோபதபிராமணம் ஒன்றே உளது. இப்பிராமணம் இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

(தொடரும்.)

ஒன்றைப் பார்த்துச் செய்யப்பட்டதிலும்
முதலாகச் செய்யப்பட்ட பொருளே எவ்வாற்றானும் சிறந்தது.

**லிட்டில்ஸ் ஓரியண்டல் பாம்**

**தைலம்.**

1885—ம் ஆண்டு முதன் முதலாகச் செய்யப்பட்டது.

1933—ம் ஆண்டிலும் இதுவே முதன்மை பெற்றுள்ளது.

**இந்தியாவில் இந்தியர்களாலே செய்யப்படுவது.**

இத்தைலத்தையே எல்லாவிதமான
நோவுகளுக்கும் வலிப்புகளுக்கும் உபயோகியுங்கள்.

(Y 18. 11-2-33—10-2-34-)

## சிறு கதைப் பகுதி.

—:o:—

(4-ம் பக்கத் தொடர்ச்சி.)

அக்கினி சாட்சியாக வேதவேதியர் முன்னிலையில் எனது காவலர்க்கு அர்ப்பணம் செய்த இந்தத் தேகத்தின் ஓர் மயிரையேனும் நீ தொடுமுன், என்னைப் பிணமாகக் காண்பாய்; இது சத்தியம்; நான் இறந்தபின், என் பிரேதத்தை நீ தூக்கிச் செல்லலாம்!" என்று ஆர்ப்பரித்தாள் வீரமங்கை.

அவள் அருகே நின்று நடப்பவற்றைக் கண்டுகொண்டிருந்த சேடியரும், தன் குட்டிகளுக்கபாயம் நேர்ந்தவிடத்து வீறுகொண்டெழும் பெண்சிங்கம் என உருவிய வாள்களுடன் அவளருகே வந்து நின்றனர். "ஆ! அவர்களிலும் மூன்று பேர் எங்களிலும் மூன்றுபேர்! இராஜபுத்ர இரத்தம் எவரில் அதிகம் செறிந்திருக்கிறது என்பதைப் பார்க்கலாம்!" என்றாள் வீரமங்கையான ஓர் பாங்கி.

அமரசிங்கன் கோபம் ஒரு பக்கம், வெட்கம் ஒரு பக்கமாக விமலாதேவியை நோக்கினான். "இன்னோர் அடி எடுத்து வைப்பையாயின் என் வாளுக் கிரையாவாய்" என்றாள் மற்றப்பாங்கி.

"என்னிடம் கைத்துப்பாக்கி ஒன்று உளது என்பதை நீ அறியவில்லையோ?" என்றான் அமரசிங்கன்.

"கோழையின் ஆயுதமே அது; அமரசிங்! நின் துப்பாக்கியால் என் பாங்கியரில் ஒருவரேனும் கீழ்விழுமுன், இந்த ஈட்டி என் நெஞ்சைக் கிழிக்கும் என்பதை அறிகுதி" என்றாள் விமலாதேவி.

ஃ

இதற்கிடையில் அமரசிங்கனின் துணைவர் இருவரும் அவ்விடம் வந்துவிட்டனர். ஒருபக்கம் 3 ஆடவர்; ஒருபக்கம் பெண் சிங்கங்கள் என 3 வீரமங்கையர்; ஒருவரையொருவர் இமைகொட்டாது பார்த்துக்கொண்டே நின்றனர்.

எங்கும் நிசப்தம்; ½ மணித்தியாலம் இப்படியே சென்றுவிட்டது. "ஆ! பெண்மணி! நின்மனம் கல்லா! இரும்பா! கற்பாறையா! நின் வதனாரவிந்தத்தைப் பார்த்த பின்னரும், நின்னைக் காதலியாகப் பெறுது நான் இனி எவ்வாறு உயிர் வாழமுடியும்! ஐயோ, முன்னாளில் செய்த பிரதிக்கினையை மறந்தனையோ?" என்று அமரசிங்கன் கடைசியாக அழுதான்!

விமலாதேவி மறுமொழி கூறவில்லை; ஆனால் கோபசிரத்துடன், அப்பாற் போகும்படி தன் சுண்டுவிரலினுற் காட்டினள்!

அமரசிங் பேச்சற்றவனாகத் திரும்பினான்; குதிரை கட்டியிருந்தவிடம் சென்றான்.

என்ன ஆச்சரியம்! அப்பெண்மணி போவென்று கையாற் காட்டியவுடன் அவன் செல்லக் காரணமென்ன? வீரமங்கையின் கட்பார்வை மாத்திரத்தால் வீரசிங்கமான அமரசிங்கன் கபேக்கமுறக் காரணமென்ன? அவன் காமத்தைத் தணித்துத் தாய் முன்னர் சேய் நின்ற மாதிரிச் செய்த சக்திதான் என்னே? இக்கேள்விகளுக்கு நமது ஹிந்துப் பெண்களே விடைபகரவல்லார்.

ஃ

அமரசிங்கன் தன் குதிரை கட்டி நின்றவிடம் சென்றானல்லவா? அவனுடன் கூட வந்த ரணவீரன் கூடச்செல்லாது அங்கேயே நின்றான்! இவன், விமலாதேவியின் பாங்கி ஒருத்தியைக் காதலித்தான் என்று முன்னர்ச் சொன்னோம். அவன் அவளை நோக்கி, "கண்மணி, நீ வரவில்லையோ! என் காதலையும் நீ புறக்கணிப்பாயோ?" என்றான்! தனது இரகசியத்தை வெளியிட்டமைக்காக அவன் மீது ஆத்திரங்கொண்டிருந்த அம்மங்கை அவனைச் சினந்து, "சீ! காதல்! அதிலாண்டேள்வரியின் சந்நிதானத்தின் முன்னர் இச்சொல்லைக் கூற உனக்கு வெட்கமில்லையா? நீ என்மீது காதல் கொண்டிருய்? சீ! அதற்காகத்தானே எனக்குத் துரோகம் செய்து எமதரசிக்குத் துன்பம் விளைக்க ஏதுவானுய்? நான் ஒரு விளையாட்டுப் பொருள் என்று எண்ணினுய்?" எனக் கூறித் தன் உருவிய வாளுடன் அவனை நோக்கிச் சென்றாள்!

"பாங்கி! திரும்பிவா!.........அமரசிங்! உன்னுடைய தோழனைக் கூப்பிடு. சுகமே சென்று வாருங்கள்" என்ற செப்பிரத் தொனி விமலாதேவியின் வாயினின்றும் புறப்பட்டது. அவ்வுத்தரவு கீழ்ப்படியப்பட்டது.

யுத்தகளத்தில் கிணமளவேனும் கண்டு அஞ்சாத அவ்வீரர் விமலாதேவியின்—கேவலம் பெண்ணுகிய விமலாதேவியின்—மொழிகளுக்குக் கீழ்ப்படிந்ததேனோ?

## சாலாமிஸ்திரி லேகியம்.

—*—

இந்த லேகியத்தை யான் அநேக பிரபுக்களுக்குச் செய்து கொடுத்துப் பல வியாதிகளைக் குணப்படுத்தியதால் அவர்கள் மனமகிழ்ந்து வெகுமதிகளையுங் கொடுத்திருக்கிறார்கள். இதை நான் விளம்பரத்தில் உலகநன்மைக்காகப் பிரசுரித்திருக்கிறேன். ஆனால் பிரபுக்கள் மாத்திரமல்ல ஏழைகளும் இதனுலுண்டாகுஞ் சுகத்தை அடையும்படி பொதுஜன நலத்தைக் கருதியே இப்போது இந்த லேகியத்தைப்பற்றிப் பிரசுரித்து வருகிறேன்.

இது சாலாமிஸ்திரி, குங்குமப்பூ, சிலாஜித், கஸ்தூரி, குமாஸ்தாகா, பீதாரு, சாலாமுஸ்லி, சப்பேமுதஸ்லி, பிஸ்தாஸ், சார்ப்பருப்பு, பாதம்பருப்பு, சாத்தாவாரி, நீர்முள்ளி விதை, நாகப்பூ, வங்கபஸ்பம், அரக்பஸ்பம், பவளபஸ்பம், வெள்ளிபஸ்பம், அயகாந்த, செந்தூரம், சாம்பிராணிப்பதங்கம் இன்னும், அநேக புஷ்டியான மூலிகைவகைகள் சேர்த்துச் செய்யப் பெற்றிருக்கின்றது.

இதனுல் நீரிழிவு, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, மூலச்சூடு, ஒருவருஷத்துள் உண்டாயிருக்கும் பக்கவாய்வு, இருமல், காசம், பித்தகாமாலை, பித்தபாண்டு, பீனிசம், கைகால் காந்தல், வலி, இடுப்புவலி, பக்கவாய்வு, இன்னும் அநேக கடுமையான வியாதிகள் தீரும். ஸ்திரீகள் இந்த லேகியத்தைச் சாப்பிட்டுவந்தால், மேற்சொல்லிய வியாதிகள் சுகமடைவதுடன் சூதகவாய்வு, பிரசவ அறையில் உண்டாகும் நோய்கள் தீர்ந்து தேகபுஷ்டியும் பலமும் பெறுவார்கள். பால் விருத்தியாகும்.

இந்த லேகியத்தின் விலை ரூத்தல் ஒன்றுக்கு ரூபா உ0. அரைரூத்தலுக்கு ரூபா க0. கால்ரூத்தலுக்கு ரூபா ரு. தபாற் செலவு பிரத்தியேகம்.

சிங்கப்பூர் பினங்கு முதலிய தொடுவாயிராச்சியப்பகுதிக்கு வீ. பீ. சட்டம் இல்லாததினுல் முன் மணிஆடர் அனுப்புதல் வேண்டும்.

இங்ஙனம்.

க. ஆறுமுகம்பிள்ளை,

சிவஞான ஆரோக்கியசுகாதாரவைத்தியசாலை,

காத்தான்குடி போஸ்டு,

மட்டக்களப்பு

(Y 179. 1-1-34 to 31-12-34.) சிலோன்.

ஓ ம்!

மகாராஜ ஸ்ரீ ஸ்ரீ சாலாமிஸ்ரி லேகியம். ஓ ம்!!

ஒரே வேளையில் ஆண்மிக்க பாலீர்கள்.

இக் கங்கம் கெண்ணி முக்கு பலனாம் அயம் காக்கும் அய்ப்பர் கஸ்தூரி சாலாமிஸ்ரியும் இன்னும் அநேக மூலிகையும் சேர்த்து சாஸ்திர முறைப்படி செய்யப்பெற்றது.

இதன் முக்கிய குணம்:—

காலை இடுப்புவலி கைகால் அசதி முதலிய மற்ற நோய்களை அகற்றி தேகத்தைப் புஷ்டியாக்கும். இப்புஷ்டியை இப்புவலியில் இந்த லேகியமொன்றே. முழுவியாதிக்கும் அவசியம் ஒரு மண்டலம் சாப்பிடவேண்டும்.

1 மண்டலம் சாப்பிடின் ரூ. 10 0 0. ½ மண்டலம் ரூ. 5 0 0. ¼ மண்டலம் ரூ. 2 12 0.

ஞக்கீம் V. A. ஜாக் கம்பெனி,

பறங்கிப் பேட்டை, (S. I.)

(Y. 147. 20-11-33to19-11-34.)

"காண்டிநேண்டல்"

கம்பெனியின் தொழில்

வருமானம் Rs. 1,500,000.

ஜீவிய நிதியில் சேருங்கள்.

மாதம் ரூபா 2.

10 வருஷத்தில் ரூபா. 500

ஆதாயம் பெறுவீர்கள்.

ஏழைகளும் செல்வரும்

விரும்பக்கூடிய கம்பெனி.

கிளைஆபீஸ்கள்: சாவகச்சேரி, கண்டி, மட்டக்களப்பு.

E. P. புயூஎல், உடுவில், மானிப்பாய்,

இலங்கைப் பிரதம பரிசோதகர்,

(H. 77. 17-8-33 to 16-2 34.)

## அடைவுநகை விற்பனவு விளம்பரம்.

1893 ம் ஆண்டின் 8-ம் இலக்கக் கட்டளைச்சட்டத்தின்படி லைசென்ஸ் பெற்று அடைவுபிடிக்கும் யாழ்ப்பாணம் வண்மேற்கு N. சுப்பையா & சன்ஸ் என்பவரிடம் அடைவுவைக்கப்பட்டு இப்போது தவணைதப்பி மேற்படி சட்டத்தின் 12 ம் பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்கப்படவேண்டிய நகைகளின் விபரம்:—

1932ஆ ஏப்ரல்மீ

| இல. | திக. | ரூ. ச. | ஊர் பெயர் அடைவுசாமான்விபரம். |
|---|---|---|---|
| 4307 | 12 | 7 00 | வண்கிழக்கு கார்த்திகேசக்குருக்கள் மகேஸ்வரக்குருக்கள் பித்தளை செம்பு பெரிசு 1-ம், சிறிசு 10-ம், செண்டிச்செம்பு 1-ம். |
| 4427 | 27 | 59 00 | வண்மேற்கு சுப்பன் ஆசாரி சோமேமலை ஆசாரி வெள்ளி கட்டி சிறிசு பெரிசு 4-ம் பதக்கம் சோடி 1-ம், நை சங்கிலி சோடி 2-ம் வயிரச்சன்னம்கல்லும் |
| மேமீ | | | |
| 4608 | 21 | 13 00 | ஷையூர் வைத்தியநாதர் முத்தையா இமிசல் தோடு சோடி 1 |
| யூன்மீ | | | |
| 4863 | 27 | 16 00 | திருநெல்வேலி ரங்கையாரெட்டி நாகையாரெட்டி கட்டைக் காப்புச் சோடி 1 |
| யூலாய்மீ | | | |
| 4954 | 9 | 24 00 | தட்டாதெரு முத்து நாகலிங்கம் சிவப்பு பச்சை முத்து வெள்ளை வைத்த கவுத[தோர் 1 |
| ஆகஸ்டுமீ | | | |
| 5143 | 4 | 50 00 | பறங்கிதெரு டோமினிக் பெனிமாஸ் ஏரியல் சைக்கிள் 1 |
| 51[1]1 | 10 | 15 00 | நீர்வேலி கந்தையா தம்பையா பொன் தாயித்துக்கூடு 1 |
| 5275 | 26 | 10 00 | ஷையூர் ஷையார் பொன் தாயித்துக்கூடு 1 |
| செப்டெம்பர்மீ | | | |
| 5340 | 4 | 48 00 | நல்லூர் முருகேச நாகலிங்கம் வைரச்சன்னம் வைத்த மோதிரம் 1 |
| 5406 | 12 | 90 35 | வண்கிழக்கு சுப்பையா வைரவநாதன் பொன் செட்டிப்பூரான்டியல் 1 |
| 5427 | 14 | 15 00 | ஷையூர் வேலாயுதப்பத்தர் இரத்தினப்பத்தர் செப்புக்கட்டைக் காப்பு 1 |
| 5479 | 20 | 15 00 | ஷையூர் தா மு இளையதம்பி பட்டைச் சிகப்புக்கல் புரோ 1 S |
| 5546 | 28 | 10 00 | கொக்குவில் சின்னத்தம்பி சிவஞானம் பொன் ஆடுதன் மோதிரம் 1 |
| அக்டோபர்மீ | | | |
| 5730 | 17 | 25 00 | வண்மேற்கு முருகேசபிள்ளை தம்பையாபிள்ளை தாயித்துடன் குண்டுச்சங்கிலி 1 |
| 5797 | 23 | 7 00 | வண்கிழக்கு அருணாசலப்பத்தர் துரைச்சாமிபத்தர் பொன் கைச்சங்கிலி 1 |
| நவம்பர்மீ | | | |
| 5887 | 1 | 10 00 | ஷையூர் மருதன் இளையவன் பொன் தாயித்து 1 |
| 5905 | 3 | 130 00 | தட்டாதெரு சண்முகம் சோமசுந்தரம் குண்டு இரண்டுடன் சங்கிலிச்சரடு 1 |
| 5933 | 6 | 7 00 | வண்மேற்கு கிருஷ்ணபத்தர் சண்முகபத்தர் இகல் மோதிரம் 1 |
| 5948 | 8 | 18 00 | பெருமாள்கோவிலடி சின்னத்தம்பி மாணிக்கம் கல்வாளி சோடி 1 கறணைப்பூ சோடி 1 இகல் மூக்குக்குச்சி 1 பழுதன்ன தாயித்து 1 திருகாணி 1 [வளை மோதிரம் 1 |
| 6016 | 16 | 12 00 | வண்கிழக்கு மருதப்பு செல்லப்பா காவடியில்லாத சிறுபிள்ளைக்காப்பு சோடி 1 கலா |
| 6025 | 17 | 45 00 | ஷையூர் சிவசங்கரப்பிள்ளை உலகநாதபிள்ளை பட்டைச் சிகப்புக்கல் தொங்கட்டான் 1 வைத்த இரட்டைப்பட்டுக் கைச்சங்கிலி 1 |
| 6050 | 19 | 12 50 | ஷையூர் சின்னக்குட்டி பொன்னம்பலம் பொன் ஆடுதன்மோதிரம் 1 |
| 6074 | 22 | 13 00 | தட்டாதெரு முத்து நாகலிங்கம் காட்டுக்கடுக்கன் சோடி 1 |
| 6103 | 26 | 21 23 | வண்கிழக்கு பொன்னு சிவனைத்துரை மனுக்கன் சிகப்பு டிப்பி பதக்கம் 1 |
| 6111 | 26 | 10 00 | ஷையூர் காசிநாதச்செட்டியார் கந்தையா அட்சரக்கூடு 1 |
| டிசம்பர்மீ | | | |
| 6155 | 1 | 17 05 | ,, நாகலிங்கம் நவரத்தினம் குண்டுவைத்த அரைத்தங்கப்பவுண் 2 |
| 6226 | 10 | 28 00 | பெருமாள்கோவிலடி சின்னத்தம்பி மாணிக்கம் இமிசல் சிறிசு பெரிசுதோடு சோடி 2 |
| 6233 | 12 | 35 00 | அராலி காசிநாதர் மாணிக்கம் பொன் சங்கிலி அட்டியல் 1 |
| 6242 | 14 | 7 00 | வண்ணார்பண்ணை சுப்பையா கனகசபை இமிசல் தோடு சோடி 1 |
| 6284 | 20 | 16 00 | தட்டாதெரு முத்து நாகலிங்கம் இகல் தோடு சோடி 1 ஒன்றில் திருகில்லை |
| 6310 | 22 | 60 00 | வண்கிழக்கு இராமசாமி அண்ணாசாமி வைரச்சன்னம் இரண்டுவைத்த தொங்கட்டான் ஊசி 1ம் செயின்சங்கிலி 1 |
| 6325 | 24 | 25 00 | கொக்குவில்மேற்கு சுந்தரம்பொன்னுத்துரை கல்வைத்த தாயித்துச் சோடி 1 |
| 6368 | 28 | 10 00 | அளவெட்டி குஞ்சரம் வைரமுத்து இகல் மோதிரம் 1 |
| 6380 | 30 | 30 00 | வண்கிழக்கு டாப்பையா ராசசுந்தரம் பொன் குண்டுச்சங்கிலி 1 |
| 6386 | 31 | 10 00 | ஷையூர் ஷையார் இமிசல் கோதுப் புரோச் 1 |

விற்பனவு: ஸ்ரீமுகஞு மாசிமீ 7-ந் திகதிக்குச் சரியான (18—2—34) ஞாயிற்றுக்கிழமை காலை 3 மணி தொடக்கம் ஏடுபட்டநகை பிறர்க்கலாக மிகுதி மேற்படி கடையில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

சி. ஐயம்பிள்ளை உடையார்:
வெண்டிஸ்மேன்தர்-

(Mis. 196. 1 & 5 2 34)

காலத்துக்குத்தக்க மலிவுவிலை!

# மங்களூர் ஓட்டுக் கம்பேனி.

மிலிற்றறி, கவர்ன்மென்ட், முனிசிப்பல்

கொந்திருத்துக்காரர்.

மோர்க்கன் ஓடு, 1931 தொடக்கம் வருஷக் கொந்திருத்தாய் கவர்ன்மென்டுக்குக் கொடுக்கப்பெற்று வருகின்றது.

வேறு எந்த ஓட்டிலும் இல்லாத இரண்டு வரைகள் மோர்க்கன் ஓட்டில் இருக்கின்றன. இவை அடைமழைக்கும் ஓட்டைக் கசியவிடாது காத்துக் கொள்ளும்.

பத்துப் பதக்கம் பரிசுபெற்று, மற்ற எல்லா ஓட்டிலும் பார்க்க, அதிகம் இடத்தை மூடக்கூடிய எங்கள் தங்கமேடல் ஓடுகள் (Secretariat, State Council Chamber) இராசாங்கப் பெரிய கந்தோர்கள், கவுன்சில் மண்டபம் முதலிய கட்டிடங்களுக்குப் பாவிக்கப்பெற்று வருகின்றன.

தலைநகரக் கந்தோர்:–64-ம் நி-ர். ஆதிருப்பள்ளித்தெரு, கொழும்பு.

க. சே. த. சே. செல்லையாபிள்ளை:-316–ம் நி-ர். கிட்டங்கித் தெரு, யாழ்ப்பாணம்.

சோமசுந்தர முதலியார் வளவு:-வில்லூன்றி, திருக்கோணமலை.

W. B. S. தர்ம சூரிய:-பெட்டிக்கலவத்தை, காலி.

பல இடங்களுக்கும்போய், எங்கள் ஓடுகளை விற்க ஏசென்ருய் :சுன்னுகம் இ. தாமோதரம்பிள்ளை நியமிக்கப் பெற்றிருக்கின்றார்.

Y. 2. 31-3-34.)

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்கமன்னன், கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள்வாழ்க, நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க, மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

Printed and Published by S. ADCHALINGAM, residing at Ayanarkovilady, Van: West Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabai Jaffna, at their Press, the Saiva Prakasa Press, Vannarponnai, Jaffna on Monday 5 th February 1934.